எழுந்து ஒளி வீசு

# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 61
விலை ரூபாய் 30.00

தீபம்-61 | புரட்டாதி இதழ் - 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362

கிறிஸ்து உங்களை ஏற்றுக் கொள்வது போல நீங்களும் ஒருவர் ஒருவரை ஏற்றுக் கொள்ளுங்கள் (உரோ 15:7)

## புனித மரியாள் பேராலய 126வது திருவிழாவை முன்னிட்டு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினரால் நடாத்தப்பட்ட மறையுரை வினாவிடைப்போட்டி



கடந்த 06.08.2019 - 14.08.2019 வரை நடைபெற்ற நவநாள் திருப்பலியில் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் பங்குத் தந்தையுடன் இணைந்து விவிலிய வாசிப்பு ஆண்டை ஊக்குவிக்கும் முகமாக நவநாள் கருப்பொருளுக்கு அமைய மறையுரையாளர்களினால் வழங்கப்பட்ட மறையுரைகளில் இருந்து வினாக்கள் கேட்கப்பட்டு அதற்கு சரியான விடையளித்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. அதனை பேராலய கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர் வழிநடத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.





## இயேசுவோடு 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் : புனித பற்றிமா மாதா ஆலயம்,
தம்பலகாமம்.

காலம் : 07.09.2019 (சனிக்கிழமை)

நேரம் : மதியம் 12 மணி முதல்
இரவு 12 மணி வரை



திருகோணமலை மறைமாவட்டத்
திருச்சபையாக
செபத்தில் இணைந்திடுவோம்.

## புனித சதாசகாய அன்னை ஆலயம், அன்புவழிபுரம்

### - வருடாந்த திருவிழா நிகழ்வுகள் -





அன்புவழிபுரம் புனித சதா சகாய அன்னையின் வருடாந்த திருவிழா 02.08.2019 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.08.2019 திருவிழா திருப்பலி மறைமாவட்ட ஆயர் அதிவந். கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. நவநாட்களில் எமது மறைமாவட்டத்தின் இவ்வருடத்தின் கருப்பொருளான விவிலிய வாசிப்பு ஆண்டு, புனித லூக்கா நற்செய்தி, மற்றும் சமூக விழிப்புணர்வு இவற்றை மையப்படுத்தியதான சிந்தனைத் தலைப்புக்கள் வழங்கப்பட்டு, மறையுரைகளும் அதனைத் தழுவியதாக இருந்தது.

திருவிழாவை மேலும் மெருகூட்டும் வகையில் இறைமக்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பங்களிப்புடன் புதிய கொடிமரமும் நிர்மாணிக்கப்பட்டது. அன்று சிறார்களுக்கு முதல் நன்மை, உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள் மறைமாவட்ட ஆயரினால் வழங்கப்பட்டது. இத்திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு பங்குத் தந்தை அருட்பணி க. நிதிதாசன் அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்ட ஆலய பரிபாலண சபை உறுப்பினர்கள், ஏனைய பக்திச் சபைகளின் உறுப்பினர்கள், மற்றும் இறைமக்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் பேருதவியாக இருந்தது.

சதா சகாயம் புரியும் அன்னையே, எங்களுக்காக
பரிந்து பேசும் தாயே

**திருமதி. சிந்துஜா லெப்பன்,**
செயலாளர்,
ஆலய பரிபாலன சபை

## மறைமாவட்ட விவிலிய அறிவுப்பரீட்சை மற்றும் பேச்சுப்போட்டி - 2019

27.07.2019 அன்று தி / புனித மரியாள் கல்லூரியில் (தேசிய பாடசாலை) நடைபெற்றது. தமிழ் சிங்கள மறைக்கல்வி மாணவர்கள் பரீட்சை எழுதினார்கள். பரீட்சை முடிவில் மறையாசிரியர்களிடமும், மாணவர்களிடமும் கருத்துக்கணிப்பு பெறப்பட்டது. கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சில் இருந்து பணியாளர் ஒருவர் வருகை தந்ததும் குறிப்பிடத்தக்கது.







10.08.2019 அன்று திருமறைக்கல்வி நிலையத்தில் விவிலிய பேச்சுப்போட்டி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் நடைபெற்றது. மதிப்பீட்டாளர்களாக அருட்பணி. எழில் இ.ச, அருட்சகோதரர் ஜெசிந் இ.ச, அருட்சகேதரி சகுந்தலா, திருமதி. கே. பி. திலிப்குமார். திரு. நிஸாந்த் றோய், செல்வி. மதுவந்தி, திருமதி. ஜெ. ஜெயராஜ் ஆகியோர் பணியாற்றினார்கள். இப்போட்டிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பங்குத்தந்தையர்களுக்கும் பயிற்றுவித்த மறையாசிரியர்களுக்கும் பிள்ளைகளை ஊக்குவித்த பெற்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தாய் நீ செய்வது அனைத்தையும் பணிவோடு செய் (சீரா 3:17)

## சுயவிழிப்புணர்வுத் தொடர் - 05

# இன்னுமா தயக்கம்!

இறைஇயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் "நான்" என்ற அகந்தையினால் நம் மகிழ்வு காணாமற் போயிற்று என்பதைக் கண்டோம். இந்த இதழில் அந்த மகிழ்ச்சியை எப்படி திரும்பப் பெற்றுக் கொள்வது என்பதைப் பற்றிப் பார்ப்போம். கத்தோலிக்கத் திருச்சபையில், செப்டம்பர் மாதம், வியாகுல மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதமாகும். எவ்விதமான மாசுக்களும் அணுகாத அன்னை மரியாள் பட்ட வேதனைகளை சொல்ல இயலாது. ஆனாலும் அன்னை மரியாள், தன் தூய்மை நிலையில் சற்றும் விலகாமல் வாழ்ந்தாள். இந்த அன்னை மரியாளின் மனஉறுதியையும் தாழ்ச்சியையும் தியானித்துக் கொண்டு இந்த மாதத்தின் கட்டுரைக்குள் நுழைவோம்.

இந்த உலகில் மகிழ்ச்சியைத் தேடாத மனிதர்களே இல்லை. குடும்பத்திலுள்ள மக்கள், தங்கள் மகிழ்ச்சியை தங்கள் குடும்பத்திலும், தாங்கள் உருவாக்கிய சாதனைகளிலும் தேடுகின்றனர், குடும்பத்திலிருந்து வெளியே வந்து துறவறத்திலுள்ள மக்கள், தங்கள் மகிழ்ச்சியை இறைவனில் தேடுகின்றனர். அனைத்தையும் துறந்த துறவியானாலும், அவரும் கூட மகிழ்ச்சியை தேடிக் கொண்டு தான் இருக்கின்றார்.

அப்படியானால், மகிழ்ச்சியாக வாழும் மனிதர்கள் யாருமே இந்த உலகில் இல்லையா? இந்த உலகில் துன்பம் தான் நிலையானதா? இந்த உலகம் மிகவும் அழகானது என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா? ஏன்ற கேள்விகள் நம் உள்ளத்தில் எழலாம்.

அன்பார்ந்தவர்களே! மகிழ்ச்சியை அனுபவிக்காத மனிதர்களே இல்லை எனலாம். எல்லோரும் ஏதாவது ஒரு தருணத்தில் மகிழ்ச்சியாக இருந்திருக்கின்றார்கள், அது போன்று, ஏதாவது ஒரு தருணத்தில் சோகமாக இருந்திருக்கின்றார்கள். எனவே மகிழ்ச்சி என்பது இனிப்பைப் போன்று அனைவராலும் விரும்பப்படுகின்ற ஒரு சுவை. எனவே மனிதன் தொடர்ந்து அந்த சுவையை சுவைக்க விரும்புகிறான். அது போல, சோகம், கசப்பு சுவையைப் போன்று மனிதன் விரும்பாத ஒரு சுவையாகும். அதன் விளைவாக சோகத்தை தவிர்த்து மகிழ்ச்சியாக மட்டுமே இருக்க விரும்புகின்றான். ஆனால், மகிழ்ச்சியும் சோகமும் மாறி மாறி நிறைந்தது தான் வாழ்க்கை என்பது தான் நிதர்சனம். எனவே இந்தக் கட்டுரையில் மகிழ்ச்சி, சோகம் வருகின்ற வீதத்தை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றி விவாதிக்கவிருக்கின்றோம். சோகத்தைக் குறைத்து, மகிழ்ச்சியை அதிகப்படுத்தும் வழி என்ன என்பதைத் தான் இந்த கட்டுரையில் பார்க்கின்றோம். அதில் ஒரு வழி, மகிழ்வு காணாமற் போனதற்குக் காரணமானவைகளை ஒவ்வொன்றாகக் களைவதாகும்.

சென்ற இதழில் நம் மகிழ்ச்சி, "நான்" என்னும் ஆணவத்தில் காணாமற்போயிற்று! என்று சிந்தித்தோம். இந்த இதழில், நம் மகிழ்ச்சி காணாமற்போனதற்குக் காரணமான இந்த "நான்" என்னும் ஆணவத்தை எப்படி கையாள்வது என்பதைப் பற்றி சிந்திப்போம். சென்ற இதழில் "நான்" என்ற ஆணவத்திற்குக் காரணம், நம் "பயம்" என்று பார்த்தோம். பயத்தின் மூலம் நம் உள்ளத்திற்குள் நுழைந்த ஆணவம், நம் போதையாக மாறி, நம்மை முற்றிலும் ஆட்கொண்டுவிடுகின்றது. இந்த ஆணவம், நம் பயத்தை அடிப்படையாகக் கொண்டு வந்ததால், அந்த பயத்தை விடாமல் பிடித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கருத்தாக இருக்கின்றது. ஆணவம், நம் பயம் தொடர்ந்து நிலைத்து நிற்க ஏதாவது செய்து கொண்டே இருக்கும். குறிப்பாக, நம் சுயநலத்தின் விளைவாக நாம் செய்யும் சிறு சிறு பாவங்கள், தொடர்ந்து நாம் பயத்தில் இருக்கவே பணிக்கின்றது. பாவம் செய்த எவனும் பயம் கொள்ளாமல் இருக்கவே முடியாது. அந்த பயத்திலிருந்து விடுபட தன்னை இன்னும் பெரியவனாகக் காட்ட மனிதன் முயற்சித்துக் கொண்டே இருக்கின்றான். இதன் மூலம் இந்த ஆணவம் நிலை நிறுத்தப் படுகின்றது.

அன்பார்ந்தவர்களே! இது ஒரு சங்கிலித் தொடர். ஒன்றன் பின் ஒன்று தொடர்ந்து கொண்டு ஒன்றையொன்று ஊக்குவித்துக் கொண்டே இருக்கும். இதை அறியாமல், மனிதன் தொடர்ந்து இந்த இரண்டையும் தன் வாழ்வில் ஊக்குவித்து வளர்த்துக் கொண்டிருக்கின்றான். இந்த சங்கிலி, அறியாமை என்னும் இருளால் தொடர்ந்து சாத்தியப்படுத்தப் படுகிறது. மனிதன், இந்த சங்கிலியின் இயல்பைப் புரிந்து கொள்ளாமல் அதனைக் கண்டு கொள்ளாமல் இருப்பதாலேயே இந்த சங்கிலித் தொடர் தொடர்ந்து வலுப்பெறுகின்றது.

அப்படியானால், இந்த சங்கிலித் தொடரை அறுத்தெறிந்தால், எல்லாம் சுகமாகும் என்பது அனைவருக்கும் தெளிவாகியிருக்கும். இந்த சங்கிலித் தொடரை எப்படி அறுப்பது?

காட்டில் பலவிதமான விலங்குகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த விலங்குகளைப் பார்த்தால், ஒவ்வொரு விலங்கிற்கும் ஒரு சிறப்பான குணம் இருக்கும். காட்டில் வாழும் விலங்குகளை இரு பெரும் பிரிவுகளாக அறிவியலாளர்கள் பிரிக்கின்றனர். ஒன்று, தாவர உண்ணிகள், மற்றொன்று, விலங்குண்ணிகள். தாவர உண்ணிகள், புல், பூண்டு, இலை மற்றும் தளைகளை உண்டு வாழ்கின்றன. விலங்குண்ணிகள், மற்ற விலங்குகளை உண்டு வாழ்கின்றன. இதில் இந்த விலங்குண்ணிகளுக்கு பெரும்பாலும் தாவர உண்ணிகள் தான் உணவாக அமைகின்றன. இந்த இரண்டு விதமான உயிரினங்களிலும் நாம் பார்க்கின்ற ஒரு சிறிய வித்தியாசம் என்னவென்றால், விலங்குண்ணிகள் இயல்பாகவே சண்டையிடும் குணத்தைப் பெற்றுள்ளன. அவற்றின் விளையாட்டுக்கள் கூட மற்ற விலங்குகளை கடித்து விளையாடுவதாகவே உள்ளன. அவை தங்களுக்குள்ளே சண்டையிடுவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளன. அவர்களை நோக்கி வேறு ஏதாவது மிருகம் வந்தால், அவை, சண்டையிடும் நோக்கமாக மட்டுமே அவற்றை அணுகுகின்றன. ஒரு மிருகம் உணவு உண்ணும் வேளை அது தன் சொந்தக் குட்டியாகவே இருந்தாலும், எதிரியாகவே பாவிக்கப் படுகின்றது. ஒரு மிருகம் வாழும் பகுதியில் இன்னொரு பகுதியைச் சேர்ந்த மிருகம் வந்தால், அது ஏற்றுக் கொள்ளப்படுவதே இல்லை. இவ்வாறு, சண்டை, சண்டை என்று அவை பகைமையில் மட்டுமே வாழ்கின்றன.

ஆனால், தாவர உண்ணிகளைப் பார்க்கும் போது, அவற்றின் உடலமைப்பு தற்காப்புக்காக அமைக்கப் பட்டுள்ளதே தவிர, சண்டையிடும் நோக்கத்தில் உருவானவை அல்ல. அவை தங்கள் கூட்டத்து மற்ற விலங்கோடு விளையாடும் போது, சண்டையிட்டு விளையாடுவதில்லை, மாறாக தங்கள் பாசத்தைக் காட்டும் செயல்பாடுகளையே செய்கின்றன. அவற்றை உரசிக் கொண்டும், நக்கிக் கொண்டும் தான் விளையாடுகின்றன. வேறு தாவர உண்ணி விலங்கு அவற்றை நோக்கி வந்தால், அவை அவற்றை வரவேற்கின்றனவே தவிர, சண்டையிடுவதில்லை. இயல்பிலே அவை ஒன்றாக வாழும் இயல்பையே வெளிப்படுத்துகின்றன. எந்த தாவர உண்ணியும் தான் உண்ணும் புல்லை வேறு ஒரு மிருகம் உண்ணும் போது, அது தான் உண்ணும் புல் என்று சண்டையிடுவதில்லை, மாறாக எல்லா மிருகங்களும் சேர்ந்து மேய்வதையே விரும்புகின்றன. இவைகளிடையே தொகுதி, பகுதிச் சண்டையில்லை.

இந்த இயல்பு வேறுபாடு ஏன் என்று சிந்தித்தால், நம் பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும். இங்கே விலங்குண்ணிகள், தங்கள் உணவுக்காக மற்ற விலங்கின் உயிரைப் பறிக்கின்றன. அவை மற்ற விலங்கின் உயிரைக் கொஞ்சம் கூட மதிப்பதில்லை. அவற்றைச் சுற்றி வாழும் அனைத்து உயிர்களும் அவற்றிற்கு தங்கள் பசியைப் போக்கும் உணவு என்னும் அளவிலேயே நின்றுவிடுகின்றன. எனவே மற்ற விலங்குகளின் வலி, வேதனையை அவை உணரா. இவற்றின் உறவுகள் இலாப நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவையாகும்: தனக்கு உணவு கிடைக்கவேண்டும் என்பதற்காக யாருடைய உயிரையும் எடுக்க அவை தயங்குவதில்லை. எனவே இந்த விலங்குகளுக்கு எதிரிகள் அதிகம். எல்லா விலங்குகளையும் அவை தங்கள் எதிரிகளாகவே பார்க்கின்றன.

ஆனால், தாவர உண்ணிகள், தங்கள் பசிக்காக மற்ற விலங்கின் உயிரை எடுப்பதில்லை. ஒரு புல்லை உண்டாலும், அந்த புல்லை முற்றிலும் அழிக்கும் முயற்சியை அவை எடுப்பதில்லை. மாறாக அந்த புல், மீண்டும் வளரும் வாய்ப்பை விட்டுவிட்டே உண்கின்றன. எனவே இவை மற்ற விலங்குகளை தங்கள் உணவுக்காக கொல்லும் நிலைக்கு செல்வதில்லை. மற்ற விலங்கின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் இயல்பையும் கொண்டிருக்கின்றன. இதனால் உறவுகள் இவற்றிற்கு எளிதாக சாத்தியமாகின்றது. இவை மற்ற உயிர்களைக் கொல்லாத காரணத்தால், இவை பயமின்றி வாழ்கின்றன.

இதிலிருந்து நாம் ஒரு முக்கியமான உண்மையைக் கண்டு கொள்ளலாம். "வினை விதைத்தவன் வினையறுப்பான், திணை விதைத்தவன் திணையறுப்பான்" என்ற பழமொழி இதற்கு நன்றாகப் பொருந்தும். ஒரு மனிதன் பிறரைப் பயன்படுத்தி பிறரது உழைப்பில் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தால், தன்னை அறியாமலேயே தான் பயன்படுத்திக் கொண்டிருக்கும் அந்த ஏழைகளை தன் எதிரியாகவே பார்க்க ஆரம்பிக்கின்றான். அவர்களைப்பற்றிய ஒரு இனம்புரியாத பயம் அவனைச் சுற்றி எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றது. காரணம் அவன் தன்னைச் சுற்றியுள்ள எவருக்கும் நன்மையே செய்யவில்லை. பணம் யாருக்கும் இலாபமில்லாமல் உதவி செய்ய அனுமதிக்காது, இலாபநோக்கம் கொண்ட எதுவும் உறவை வளர்க்காது, எனவே அது மகிழ்ச்சியைத் தராது. ஒருவிதமான பயத்தையும் கலக்கத்தையும் மட்டுமே தரும். எனவே தான் அனைவருமே எதிரிகளாகத் தெரிகின்றார்கள்.

எனவே பயம் என்பது, வெளியே இருந்து வருவது அல்ல, மாறாக நம்முள்ளேயிருந்து வருவதேயாகும். இது நம் அடிப்படை நம்பிக்கையிலிருந்தே வருகின்றது. ஒரு மனிதன், தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களை தனக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தால், அவன் விலங்குண்ணியைப் போல அனைவரையும் எதிரியாகப் பார்க்கின்றான். ஆனால், பிறருக்கு தன்னாலான உதவிகளைச் செய்து தன்னைச் சுற்றியுள்ள அனைவரும் மகிழ்ந்திருக்க உதவ வேண்டும் என்று நினைப்பவன், தாவர உண்ணிகளைப் போன்று வாழ்கின்றான்: அவன் யாரையும் காயப்படுத்துவதில்லை, எனவே அவன் யாருக்கும் பயப்படுவதில்லை, அவன் நிம்மதியாக வாழ்கின்றான். அவனுக்குள் எவ்விதமான எதிர்மறை எண்ணங்களுமில்லை.

அன்பார்ந்தவர்களே! இதனை உணர்ந்து தான், நம் ஆண்டவர் இயேசு, "அன்பு செய்யுங்கள்" என்று கூறுகின்றார். அன்பு பிறரை தனக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பணிப்பதில்லை, மாறாக பிறரை மதிக்கக் கற்றுத் தருகின்றது. அன்பு பிறரை எதிரியாகப் பார்ப்பதில்லை, மாறாக அவர்களை தம் நண்பர்களாகவே பார்க்கின்றது. பிறரது உணர்வுகளைப் புரிந்து கொள்ள அழைக்கின்றது. பிறரது நல்வாழ்வுக்காக தியாகங்கள் செய்ய அழைக்கின்றது. எனவே அன்பில் சுயநல செயல்பாடுகள் இல்லை. அன்பு பிறருக்கு ஏற்படும் நன்மைகளுக்காகவே திட்டமிடுகின்றது. இதனால், பிறரைப் பார்க்கும் போது அன்பு மகிழ்கின்றது. பிறரது மகிழ்ச்சியைப் பார்க்கும் போது, அன்பு பேரானந்தம் கொள்கின்றது.

அன்பு என்ற பேராற்றல், நம்மிடம் உள்ள எதிர்மறை எண்ணங்களை அகற்றி, நம் தேவையற்ற பயத்தை நீக்குகின்றது. நம்மில் உள்ள "நான்" என்ற ஆணவத்தைக் குறைக்கின்றது. இதுவே, "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லோரும் என்னிடம் வாருங்கள்!" என்ற இயேசுவின் அழைப்பாகும். இந்த பயமும் அகந்தையும் தரும் சுமையை இறக்கி வைத்துவிட்டு, அன்பை அணிந்து கொள்ளுங்கள், நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். அன்பின் வழியாக வரும் அழைப்புக்களும் நம்மை ஒருசில செயல்பாடுகளுக்கு அழைக்கின்றன. ஆனால், அந்த செயல்பாடுகள் நம் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கும் செயல்களேயன்றி நமக்கு துன்பம் தருபவை அல்ல. அன்பின் செயல்பாடுகள் நமக்கு மகிழ்ச்சியை மட்டுமே தருகின்றன. இதுவே ஆண்டவர் இயேசு தரும் நுகம்: அழுத்தாத நுகம்!

எனவே மகிழ்ச்சியாக இருப்பதற்கும் நம் சோகத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் மிகச் சிறந்த வழியாக அன்பு செய்தலை நாம் தேர்ந்தெடுக்கலாம். இந்த அன்பைப் பற்றிய பல பரிணாமங்களை வருகின்ற இதழில் பார்ப்போம் என்று கூறி, மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன், நன்றி! வணக்கம்!

**இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் பிடித்தது

## பக்குவம்



பதினாறு முட்டைகள்.
அடைகாத்து அமர்ந்திருந்தது கோழி.

இருபத்தி ஓராம் நாளில்...
குஞ்சுகள் பொரிக்க ஆரம்பித்தன.
கலர் கலராய் பதினைந்து குஞ்சுகள் வெளிவந்தன.

பதினாறாவது குஞ்சு மட்டும்...
தன் மூக்கை வெளியே நீட்டியபடி
முட்டைக்குள் தவித்தது.
முண்டி முண்டிப் பார்த்தது.
சத்தம்தான் வந்தது. உடைத்து வர முடியவில்லை.

பொறுமையோடு காத்திருந்தது தாய்க் கோழி.

அந்த வீட்டுச் சிறுவன் ராஜா இதைப் பார்த்தான்.
முட்டைக்குள் தவித்த குஞ்சைப் போல இவனும் தவித்தான், பரிதாபப்பட்டான்.
கோழிமேல் கோபப்பட்டான்:
'இந்தத் தாய்க் கோழிக்கு அறிவு அறவே கிடையாது.
முட்டையின் ஓட்டைக் கொத்தி உடைத்து
குஞ்சை விடுவித்தாலென்ன?
ஏன் இப்படி தவிக்கவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது?'

உடைத்து விட கையை கொண்டு போனான்.
'உர்... உர்..' என்று சிலிர்த்து எதிர்ப்பைக் காட்டியது தாய்க் கோழி.

அரைநாள் காத்திருந்தான்.
குஞ்சு வெளியே வந்த பாடில்லை.

'பக்குவப்படட்டும்' எனப் பொறுத்திருந்தது தாய்க் கோழி.

ஆனால் பொறுமையிழந்தான் ராஜா.
முடிவெடுத்தான். தாய்க் கோழி காட்டிய எதிர்ப்பையும் மீறினான்.
ஓட்டை உடைத்து விட்டான். விடுதலை தந்தான்.

வெளியே வந்த குஞ்சு துள்ளிக் குதித்து மகிழ்ச்சியால் கத்தியது.
பெருமிதம் கொண்டான் ராஜா.
'ஒரு குஞ்சுக்கு உயிர் தந்துவிட்டேன்.'

வெளியே வந்த குஞ்சு கொஞ்ச நேரத்தில் குறுகியது.
வெளிவெப்பம் தாளாமல் துவண்டு போனது.

சில நிமிடங்களில்...
எதிர்ப்பு சக்தியின்றி செத்தே போனது.

ஐந்தறிவு படைத்த கோழி
ஆறறிவு படைத்த ராஜாவிடம்
கண்ணீரை அடக்கியபடி சொன்னது:
'பக்குவப்படுமுன்னே பக்குவப்படுத்தாதே!
பிஞ்சிலே பழுக்காதே...! பழுக்க வைக்காதே...!'

# பதிப்பாசிரியர் பகிர்வு





அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்

அன்பிற்கினிய வாசகப் பெருமக்களே!

இம்மாதம் 14ம் நாள் 'திருச்சிலுவையின் மகிமை' எனும் விழாவைக் திரு அவை நமக்குத் தந்துள்ளது. அவமானத்தின் சின்னமாகிய சிலுவை எவ்வாறு மகிமை பெற்றது என்பதை நாம் அறிவது நன்மையானதே!

உரோமை சாம்ராஜ்யத்திலே குற்றவாளிகளைத் தண்டிக்க தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று எமது ஆலய பீட முற்றங்களிலே பாடுபட்ட சிலுவைக்குப் பதிலாக ஒரு தூக்குக் கயிற்றில் தொங்கும் இயேசுவின் உயிரற்ற உடலையே நாம் பார்த்திருப்போம். ஒருவேளை மரண தண்டனை கல்லால் எறிந்து கொல்லப்படுதல் என்று நிறைவேற்றப்பட்டிருந்தால் ஆலய பீட முற்றங்களிலே ஒரு பெரிய கல் குவியலையும் அதனை அடுத்து குத்திக் காயப்பட்ட, நைந்து உடைந்து உருக்குலைந்து உயிரற்ற நிலையில் இருக்கும் இயேசுவின் உடலையும் பார்த்திருக்க வேண்டியிருக்கும். ஆனால் இவற்றிற்கு மாறாக, சிலுவையில் தொங்கும் இயேசுவையே நமது பீட முற்றங்களில் காண்கின்றோம். சிலுவைச் சின்னம் நம் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது. அது எமது கழுத்தில் தொங்கும் பதக்கமாகவோ, கல்லறைகளில் கல்வெட்டுக்களாகவோ, அல்லது உடலில் பச்சைகுத்தியும் மலை உச்சிகளில் உயர் அடையாளமாகவும், ஆலய கோபுரங்களில் மின்னொளியூட்டப்பட்ட அலங்காரச் சிலுவைகளாகவும் பயன்படுத்தப் படுகின்றன. மொத்தத்தில் அவமானத்தின் சின்னம் என்ற மனநிலை முற்றாக மாறி, பாடுகள், மரணம், உயிர்ப்பு வாழ்வு என்பவற்றின் உண்மையை எடுத்துரைக்கும் மாண்புமிக்க சின்னமாக சிலுவை, திருச்சிலுவையாக எம்மத்தியில் வலம் வருகின்றது.

இயேசு மனுவுரு எடுத்தபோதே தம்மை வெறுமையாக்கத் தொடங்கினார். 'தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று, மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்' என புதிய ஏற்பாட்டிலே படிக்கின்றோம் (காண். பிலி 2:7-8). இயேசு சிலுவைப் பீடமேறி தம்மையே பலியாக்கி எமக்காக தம் வாழ்வைப் பலியாக்கினார். இவ்வாறு நமக்கு அவர் சொல்லும் செய்தி!!!

உக்கிரமாகப் போர் நடக்கும் போர் முனைக்குத் தான் போகாமல் தன் துணைத் தளபதியை அனுப்பி வைக்கும் படைத் தளபதியைப் போலவோ, செவிலித் தாய்மார்களை கூலிக்கமர்த்தி தம் பிள்ளைகளைப் பராமரிக்கும் பெற்றோரைப்போலவோ, கிருமி தடுப்பு கையுறை அணிந்து நோயாளிகளைப் பரிசோதித்தபின்பு முன்னெச்சரிக்கையோடு கை அலம்பும் வைத்தியரைப் போலவோ நான் செயல்படுவதில்லை. மாறாக, ஒருவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யுமுன் 'மகனே மகளே, பயப்படாதே! நானும் உன்னைப் போல வெட்டப்பட்டவன்தான். இதோ பார் என் தழும்புகள்' எனக்கூறி குத்தித் திறக்கப்பட்ட தன் விலாவைக் காட்டி நோயாளியைப் பரிவுடன் நோக்கும் வைத்திய நிபுணரைப் போல இருக்கின்றார் இயேசு. நானும் உன்னைப் போல அடாவடித்தனத்திற்கும் அராஜகத்திற்கும் உட்பட்டவன். உன்நிலை எனக்குப் புரிகின்றது என எம் இதயத்து ஆதங்கங்களை உய்த்துணரும் ஆன்மீக வைத்தியராக இருக்கின்றார்.



'நான் சிலுவையில் மும்மணி நேரம் தொங்கி அவமானச் சின்னமதை வாழ்வின் சின்னமாக, வெற்றியின் சின்னமாக மாற்றியது போல, மகனே, மகளே நீயும் என் சிலுவையை உற்று நோக்கி, தியானித்து, உன் வாழ்வில் வரும் குற்றப் பழிகளையும், ஒழுக்கக் கேடுகளையும், பாவ மாசுகளையும் உருமாற்றி சாவின் பிடியிலிருந்து வாழ்வின் வசந்தத்திற்குள் செல்' என தூதுரைக்கின்றார் இயேசு.

'சிலுவை பற்றியச் செய்தி அழிந்து போகிறவர்களுக்கு மடமையே. ஆனால், மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை' (காண் 1 கொரி 1:18) எனக்கூறும் புனித பவுலடியாரோடு இணைந்து சிலுவையின் பெருமையை, மகத்துவத்தை பறைசாற்றுவோம்.

# புரட்டாதி 2019
## மறைமாவட்ட நிகழ்வுகள்

| | |
|---|---|
| 01.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 22ம் ஞாயிறு |
| | : தேசிய இளைஞர் தினம் |
| 03.09.2019 செவ்வாய்க்கிழமை | : குருக்களுக்கான மாதாந்தத் தியானம். |
| 07.09.2019 சனிக்கிழமை | : 12 மணி நேர நற்கருணை ஆராதனை தம்பலகாமம் பங்கு. |
| 08.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 23ம் ஞாயிறு. |
| | : சாம்பல்தீவு - புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : நிலாவெளி - கோபாலபுரம் வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| 09.09.2019 திங்கள்கிழமை | : அருளாளர் பிறட்றிக் ஓசான்னம் - விழா. |
| 13.09.2019 வெள்ளிக்கிழமை | : புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை மாதாந்தக் கூட்டம். |
| | குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| 14.09.2019 சனிக்கிழமை | : மரியாயின் சேனை - கியூரியாக் கூட்டம். |
| | : குடும்ப அப்போஸ்தலம் - திருமண முன் ஆயத்தக் கருத்தரங்கு. |
| | கி. வா. சமூகம் - திருகோணமலை, மட்டக்களப்பு அங்கத்தவர்களின் ஒன்றுகூடல். |
| 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 24ம் ஞாயிறு. |
| | : தேசிய மறைக்கல்வி தினம் |
| | : திருகோணமலை பொது வைத்தியசாலை - புனித வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : சாம்பல்தீவு - 6ம் கட்டை திருச்சிலுவை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் - நாட்டியப் போட்டி. |
| 21.09.2019 சனிக்கிழமை | : கி. வா. சமூகம் - மாதாந்த நற்கருணை ஆராதனை. |
| 22.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 24ம் ஞாயிறு. |
| | : கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் - இளையோர் ஞாயிறு. |
| 27.09.2019 வெள்ளிக்கிழமை | : புனித வின்சன்ட் டி பவுல் - விழா. |
| 28.09.2019 சனிக்கிழமை | : மறையாசிரியர் கருத்தரங்கு. |
| | : கி. வா. சமூகம் - ஒரு நாள் தியானம். |
| | : அன்பியம் - மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம். |
| 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை | : பொதுக்காலம் 25ம் ஞாயிறு. |
| | : புனித குவாடலூப்பே அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா. |
| | : சாம்பல்தீவு - கோணேசபுரி அதிதூதர் மிக்கேல் ஆலய வருடாந்தத் திருவிழா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையா அது என்ன?



உண்மை என்றால் என்ன என்பதற்கு பல அறிவியலாளர்கள் பல விபரணங்களைக் கொண்டிருந்தாலும் மெய்யியலாளர்களின் 'உண்மை' பற்றிய விளக்கம் ஒரு சிறப்பானதாகக் காணப்படுகின்றது. அதாவது ஒரு பொருளுக்கு அல்லது ஒரு விடயத்திற்கும் அதனைப் பற்றி நாம் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இருக்குமாயின் அதனை 'உண்மை' என்று மெய்யியலாளர்கள் வரைவிலக்கணம் கொடுக்கின்றார்கள். கிரேக்க தத்துவயியலின்படி, மனிதன் ஒரு சிந்திக்கும் ஆற்றல் கொண்ட விலங்காவான். மேலுமாக, ஒரு பொருளினதோ அல்லது ஒரு வாதத்தினதோ இருப்பு நிலையென்பது மேற்சொன்ன சிந்திக்கும் விலங்கான மனிதனது சிந்தனையில் தான் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறெனின், இவ்வுலகின் படைப்புக்கள் அனைத்தின் இருப்பு நிலையானது அவற்றைப் படைத்த படைப்பாளியான இறைவனில் தங்கியிருக்கிறது என சொல்லலாம்.

படைத்தவனின் எண்ணத்திலே தான் இப்படைப்புக்கள் அனைத்தும் வண்ணங்களாகின. நாம் அனைவரும் பொம்மைகள் என்றால் எம்மை ஆட்டுவிக்கும் கயிறு அவன் கைகளில்தான் (படைப்பனைத்தின் இருப்பும் படைத்தவனின் கைகளிலே தான்) ஆகவே, எப்போது ஒரு படைப்பின் இருப்பு நிலையும் படைத்தவனின் எண்ணமும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கின்றதோ, எப்போது ஒரு பொருளையோ, அல்லது வாதத்தையோ மையப்படுத்திய மனிதனது எண்ணமும் படைத்தவனின் எண்ணமும் ஒன்றுபடுகின்றதோ அதுவே உண்மை எனப்படும்.

'உண்மை' பற்றிய உலக அறிவு இவ்வாறு இருக்க, இயேசுவிற்கும் ஆளுநர் பிலாத்துவிற்கும் இடையிலான உரையாடலிலே இயேசு உண்மை பற்றிப் பேசுகிறார். ஆனால் பிலாத்து உண்மை பற்றி எதுவுமே அறியாதவனாய் காணப்படுகிறான்.

ஆக, உண்மையிலேயே பிலாத்துவிற்கு 'உண்மை' என்றால் என்னதென்று தெரியாதா? அல்லது இயேசு இங்கு குறிப்பிடுகின்ற 'உண்மை' பற்றி, இவனுக்கு எதுவும் தெரியாதா?

இயேசு தோமாவிற்கு 'வழியும். உண்மையும், வாழ்வும் நானே'(யோவா 14:6) எனக் கூறினார். ஆனால் இங்கு தன்னை விசாரணை செய்யும் ஆளுநன் பிலாத்துவின் 'அப்படியானால் நீ அரசன் தானோ' (யோவா 18:37) என்ற கேள்விக்கு இயேசு பதிலளிக்கும் போது 'அரசன் என்று நீர் சொல்கின்றீர், உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்: இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்' என்று கூறுகின்றார். இவ்விரு வார்த்தைகளையும் ஒப்பிடும்போது உண்மையில் இயேசு தான் உண்மையா? அல்லது அவர் உண்மைக்குச் சான்று பகர்ந்தவரா? என்ற சங்கடத்திற்குள் நாம் விடப்படுகின்றோம். சாதாரணமாக உலகம் உண்மை என்றால் எதைக் கருதுகிறதோ அதையே தமது அகராதியிருந்து அழிப்பவர்களில், அழித்தவர்களில் பலர் ஆட்சியாளர்கள், ஆளுநர்கள். இது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. இன்றைய எமது ஆட்சியாளர்களின் நிலையும் இதுவே. இவர்களின் அகராதியில் இந்த 'உண்மை' என்ற சொல்லுக்கு இடமே இல்லை. இது இவ்வாறிருக்க ஆளுநன் பிலாத்துவிற்கு 'இயேசு' பற்றிய 'உண்மை' அல்லது 'உண்மை' பற்றிய இயேசுவின் நிலைப்பாடு விளங்குவதற்கும், அறிவதற்கும் கடினமான ஒன்றுதான்.

எனவே யோவான் நற்செய்தியில் குறிப்பிடும் அல்லது இழையோடிக் காணப்படும் இந்த 'உண்மை' என்னவென்று உய்த்துணர்ந்து தெளிவு பெற வேண்டும். இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, 'என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள், உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' என்று கூறினார் (யோவா 8:31-32). தோமா, பிலாத்து இங்கு இயேசுவை நம்பிய யூதர்கள் ஆகியவர்களுக்கு உண்மை பற்றி இயேசு கூறிய வார்த்தைகளை ஆராயும்போது 'இறைவனின் மீட்புத்திட்டம் இயேசுவிலே முழுமை பெறுகின்றது. நிறைவு பெறுகின்றது. இயேசு இறைவனின் முழுமையான வெளிப்பாடு ஆகின்றார் என்பதை உண்மைக்கு வரைவிலக்கனமாக பெறுகின்றோம். எனவே இயேசுவே மெசியா என ஏற்றுக் கொள்வது என்பது நாம் 'உண்மையை' ஏற்றுக் கொள்வதாகும். இங்கு இயேசுவின் சிலுவைச் சாவு மீட்புத் திட்டத்தின் உச்ச நிலை. எனவே தான் இயேசு பிலாத்துவிற்கு கூறுகின்றார். 'உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே நான் பிறந்தேன்'(யோவா 18:37). இயேசு இந்த மீட்பு திட்டத்தை நிறைவேற்றவே பிறந்தார். இதுவே உண்மை.

அதேவேளையில் யோவான் நற்செய்தியில் இழையோடிருக்கும் ஒரே ஒரு பாவம் என்னவென்றால் இயேசுவே இறைமகனாகிய மெசியா (மீட்பர்) என்பது வெளிப்படுத்தப்படும் போது அல்லது அதனை அறிவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் அதன் விளைவாக இறைவெளிப்பாட்டின் முழுமையாகிய இயேசுவின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து அதனை வாழ மறுப்பதும் அல்லது போனால் இயேசுவின் வார்த்தைகளுக்கே செவிகொடுக்காமல் இருப்பதும் ஆகும். எனவே தான் இயேசு, தன்னை நம்பிய யூதர்களுக்கு 'என் வார்த்தைகளை கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்' என்றும் 'உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' என்றும் கூறினார்.

ஆனால் இயேசுவை பிலாத்திடம் கையளித்த யூதர்களுக்கு இயேசு தன்னை இறைமகனாகிய மெசியா என பல தடவைகள் வெளிப்படுத்திய போதும் அந்த உண்மையை ஏற்க மறுக்கின்றார்கள். இங்கே மெய்யியலாளர்களின் உண்மை பற்றிய வரைவிலக்கணத்தை யூதர்களின் நிலைப்பாட்டிற்கு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த யூதர்கள் 'உண்மையற்றவர்களாக' உண்மையை ஏற்க மறுக்கின்றனர். அதாவது மெய்யிலாளர்களின் கருத்துப்படி 'ஒரு விடயத்திற்கும் அதனைப் பற்றி நாம் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இருக்குமாயின் அது உண்மை எனப்படும்.' இங்கு 'இயேசு' என்ற விடயத்திற்கும் யூதர்கள் அவரைப்பற்றிக் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் இடையில் இணக்கப்பாடு இல்லை. ஏனெனில் 'இயேசு' என்றால் 'இறைமகனாகிய மெசியா, அவரே மீட்புத்திட்டத்தின் நிறைவு, முழுமை' இந்த இணக்கப்பாடு யூதர்களது இயேசு பற்றிய எண்ணப்பாட்டில், அறிவில் இல்லை. எனவே பொய்மை தான் யூதர்களின் எண்ணத்தில் உண்டு. தொடரும்................

ச. யூட் கெமில்டன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

# மறையாசிரியரின் பண்புகள்



1. இயேசுவே முதன்மை ஆசிரியர் ஆவார்.
2.60இற்கு மேற்பட்ட உவமைகளைக் கூறி இறையரசின் மறைபொருளை திருத்தூதர்களுக்கும், மக்கள் கூட்டத்தினருக்கும் விளக்கினார்.
3. எனவே தான் மறையாசிரியர்கள் நாளாந்தம் இறைவார்த்தையை வாசித்தல் அவசியம்.
4. திருப்பலியில் பங்கு பற்றி நற்கருணையப் பெறல்.
5.பல்சமய மக்களுடனும் மாணவர்களுடனும் பழக வேண்டியிருப்பதால் கிறிஸ்தவத்தில் ஆழமான விசுவாசம் கொண்டவராக இருத்தல்.
6. பரந்தளவு விடய அறிவு உடையவராய் இருத்தல்.
7. கற்பிக்கப் போகுமுன் விடய ஆயத்தமுடையவராயிருத்தல்.
8. பாடத்துக்குப் பொருத்தமான கிறிஸ்தவப் பாடல்கள், சிறுகதைகள் போன்றவற்றை முன்வைத்துப் பாடத்தை ஆரம்பித்தல்.
9. நற்செய்தியை நல்ல முறையில் வழங்குதல்.
10. நற்செய்தி மயமாகுதல்.
உ+ம்= ஒழுக்கம், நற்பழக்கமுடையவராய் இருத்தல், அன்பான கண்டிப்பான பேச்சுமுறை, கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கமைவாக முன்மாதிரியான வாழ்க்கை முறை.
11. கல்வியானது ஒருவரால் வழங்கப்பட வேண்டும் என்னும் சிந்தனையை அகற்றி சுயமாகத் தேடிக் கற்க வேண்டிய மனப்பாங்கை மாணவரிடையே உருவாக்க முயல வேண்டும்.
12. பல்வேறு சூழலில் இருந்து வரும் மாணவரை இனங்காணும் ஆற்றல் ஆசிரியரிடம் இருத்தல் அவசியம்.
(பெரும்பாடுள்ள பெண்ணை இயேசு இனங்காணல். லூக் 8:45, மாற் 5:30).
13. கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கைக்கொண்டு நாட்டிற்கு உதவக்கூடிய அறிவு, திறன், மனப்பாங்கை மாணவரிடையே உருவாக்க முயல வேண்டும்.
14. பெருந்தொகையான மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பாடுகளைக் கொடுத்து தனித்தனி மாணவரை கண்டறியும் தன்மை அமைதல் வேண்டும்.
15. மாணவர்களது பெயர் சொல்லி அழைப்பது, இதனால் அன்பு, உறவு பலப்படும்.
16. பழைய ஏற்பாட்டில் இறைவன் ஆபிரகாம், மோசே போன்றோரையும் புதிய ஏற்பாட்டில் சக்கேயுவையும் இயேசு அழைத்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.
17. முக்கியமான தகவல்களை ஒருவருக்கு கூறுவதாயின் இருமுறை பெயர்களை அழைப்பது வழக்கம்.
பழைய ஏற்பாட்டில் வி.ப 3:4இல் இறைவன் மோசேயை இருமுறையும் 1சாமு 3:10 சாமுவேலை இருமுறை அழைத்துள்ளார். அதேபோல் புதிய ஏற்பாட்டில் லூக் 22:31இல் சீமோனை இருமுறையும், லூக் 10:41இல் மார்த்தாவை இருமுறையும் அழைத்துள்ளார்.
18. எனவே ஆசிரியர் மாணவர்களது பெயர்களை அன்புடன் அழைப்பது அவசியமாகும்.
19. மீத்திறன் மாணவர்கள், பின்னடைவான மாணவர்களை இனங்கண்டு நெறிப்படுத்தல்.
20.மாணவர்களது குடும்ப நிலைகளை அறிந்து அதற்குகந்த முறையில் அவர்களை வழிநடத்தல்.
21. மாணவர்களது ஆற்றல், திறமை போன்றவற்றை அறிந்து அவைகளை வெளிக்கொணர வழிநடத்தலும், வாய்ப்பளித்தலும்.
22. மீளாய்வு, மதிப்பீடு கற்பித்தலின் இறுதியில் கடைப்பிடித்தல்.
(உ+ம்= எம்மாவூ வழியில் இயேசு சீடரைச் சந்தித்து உரையாடல். லூக் 24:17)

சிந்திக்க..........



மறைக்கல்வியின் தனிப்பட்ட
நோக்கம், இன்னும் தொடக்க நிலையில்
உள்ள நம்பிக்கையை இறைவனின் அருட்துணையால்
வளர்ப்பதும், இளவயதினர் முதிர்வயதினரான
விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள்
உணவூட்டி அதை நிறைவுக்குக் கொண்டு செல்வதுமாகும்.
தொடக்க அறிவிப்பில் தூய ஆவி விதைத்ததும்
திருமுழுக்கில் நிச்சயமாக அளிக்கப்பட்டதுமான
நம்பிக்கை விதைக்கு அறிவு மட்டத்திலும் வளர்ச்சி
கொடுப்பதால் இந்த நோக்கம் நிறைவுறும்.
(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி ...................

# இலங்கைத் திருச்சபை வரலாற்றில் ஒருசில முதற்படிகள்



அருட்பணியாளர். A. A. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்கு பல்கலைக்கழகம்,

❖ இலங்கையில் முதலாவது ஆயராக தெரிவு செய்யப்பட்டவர் இந்தியாவின் ஒரத்தோரியன் சபையினைச் சார்ந்த அருட்பணி வின்சன்ட் டி ரொசாரியோ (Vincent de Rosayro) ஆவார். இவர் 1838ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது திருத்தூது நிர்வாகியாக (Vicar Apostolic) நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஐரோப்பிய ஆயர் இத்தாலிய ஒரத்தோரியன் சபையினைச் சார்ந்த அருட்பணி ஒராசியோ பெற்றக்கினி ஆவார். இவர் 1846ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது திருத்தூது நிர்வாகியாக கடமையாற்றிய ஒரத்தோரியன் சபையினைச் சார்ந்த பேரருட்திரு கயித்தானோ அன்டோனியோ (Caetano Antonio) என்பவருக்கு இணை ஆயராக (Coadjutor) நியமிக்கப்பட்டார்.

❖ பேரருட்திரு பெற்றக்கினி ஆண்டகை அவர்களே இலங்கையில் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட முதலாவது நபராவார். இவர் 08.02.1846இல் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியா பேராலயத்தில் பேரருட்திரு கயித்தானோ அந்தோனியோ என்பரால் திருநிலைப்படுத்தப்பட்டார். அதற்கு முந்திய ஒரத்தோரியன் சபையினைச் சார்ந்த ஆயர்களாகிய பேரருட்திரு வின்சன்ட் டி ரொசாரியோ மற்றும் கயித்தானோ அந்தோனியோ ஆகிய இருவரும் இந்தியாவில் ஆயர்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

❖ 1849ஆம் ஆண்டில் இலங்கை வடபகுதியின் (யாழ்ப்பாணம்) முதலாவது திருத்தூது பிரதிநிதியாக பேரருட்திரு ஒராசியோ பெற்றக்கினி ஆண்டகை அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

❖ இலங்கை கொழும்பு பிரதேசத்தின் முதலாவது ஐரோப்பிய நாட்டு திருத்தூது பிரதிநிதியாக பேரருட்திரு யூசேப்பே பிராவி அவர்கள் பேரருட்திரு கயித்தானோ அந்தோனியோ அவர்களைத் தொடர்ந்து 1857ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்கள்.

❖ அமலமரித் தியாகிகள் சபையிலிருந்து முதலாவது ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டவர் பேரருட்திரு ஸ்ரீபன் செமேரியா (Stephen Semeria) ஆண்டகையாவார். அவர் அன்றைய யாழ்ப்பாண திருத்தூது பிரதிநிதியாகக் கடமையாற்றிய பேரருட்திரு ஒராசியோ பெற்றக்கினி ஆண்டகை அவர்களுக்கு இணை ஆயராக 1856ஆம் நியமிக்கப்பட்டார்.

❖ 1862ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஆறு திருக்குடும்ப கன்னியர்களே (Holy Family Sisters) இலங்கைக்கு முதலில் வருகைதந்த கத்தோலிக்க துறவற சபைக் கன்னியராவர்.

❖ உரோமையிலுள்ள விசுவாசப் பரம்புதல் சபைக் (Propaganda College) கல்லூரியில் கல்வி கற்ற முதல் இலங்கையர் மாணவர் கொர்னேலியுஸ் யுஸ்ரஸ் பிரான்ட் பெர்னாண்டோ ஆவார். இவர் 1843 - 1851ஆம் ஆண்டுகள் காலப்பகுதியில் அங்கு கல்வி பயின்றார்.

❖ இலங்கையின் முதலாவது சுதேச அமலமரித் தியாகி அருட்சகோதரர் போல் ஸ்ரீபன் புவரே (Paul Stephen Poorey) ஆவார். அவர் 1861இல் காலமானார்.

❖ இலங்கையின் முதலாவது சுதேச இயேசுசபைத் துறவி அருட்பணி S. G. பெரேரா (1905) ஆவார். அதேவேளையில் கொழும்பில் பிறந்தவரான போர்த்துக்கேய இம்மானுவேல் கொஸ்தா என்பவர் 1608இல் இயேசுசபையில் இணைந்து 1620ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

❖ கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதலாவது பேராயராக நியமிக்கப்பட்டவர் பிரான்ஸ் நாட்டு அமலமரித் தியாகியாகிய பேரருட்திரு கிறிஸ்ரோபர் பெஞ்சமின் (Christopher Benjamin) ஆண்டகையாவர். இவர் 1887ஆம் ஆண்டில் பேராயராக நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கையின் முதலாவது சுதேச ஆயராக ஆசீர்வாதப்பர் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு பீட் பீக்மேயர் (Bede Beekmeyer) ஆண்டகையவர்கள் 1911ஆம் ஆண்டில் கண்டி மறைமாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கையின் முதலாவது ஆயராக நியமனம் பெற்ற சிங்களவர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு எட்மண்ட் பீரிஸ் (Edmund Pieris) ஆண்டகையாவர். இவர் 1940ஆம் ஆண்டில் சிலாபம் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயராக நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கையின் முதலாவது ஆயராக நியமனம் பெற்ற தமிழர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு J. எமிலியானுஸ்பிள்ளை (J. Emilianuspillai) ஆண்டகையாவர். இவர் 1949ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் இணை ஆயராக நியமிக்கப்பட்டு, 1950ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயரானார்.

❖ இலங்கையில் முதலாவது மூன்றாம் நிலைக் கல்வியாகிய (Tertiary Education) உயர்நிலைக் கல்வியினை வழங்கிய கத்தோலிக்க நிறுவனமானது போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இயேசு சபையினரால் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டதாகும். அங்கு குருக்களுக்கான அறநெறி இறையியல் (Moral Theology) கற்பிக்கப்பட்டது.

❖இலங்கையின் முதலாவது உள்ளூர் சுதேச துறவற சபையானது சூசையப்பர் அருட்சகோதரர்கள் (Brothers of St. Joseph) எனும் பெயரில் யாழ்ப்பாணத்தின் திருத்தூது பிரதிநிதியாகவிருந்த பேரருட்திரு ஸ்ரீபன் செமேரியா ஆண்டகையின் காலத்தில் அருட்பணி கிறிஸ்ரோபர் பெஞ்சமின் அவர்களின் நெறிப்படுத்தலுடன் 17.04.1864இல் ஆரம்பிக்கப்பட்டது.

❖ இலங்கையின் முதலாவது திருச்சபையின் குருமடமானது (Ecclesiastical Seminary) 1869ஆம் ஆண்டில் வடக்கின் திருத்தூது பிரதிநிதியாகவிருந்து பேரருட்திரு கிறிஸ்ரோபர் பெஞ்சமின் ஆண்டகையால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே பிற்காலத்தில் புனித மடுத்தீனார் (St. Martin's Seminary) குருமடமானது.

❖ இலங்கையின் முதலாவது உயர் பட்டமளிக்கும் பல்கலைக்கழகமாக கண்டியில் திருப்பீடத்தால் (Holy See) பாப்பிறைக் குருமடம் (Papal Seminary) திருச்சபை கற்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. இக்குருமடத்திற்கு 1926ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டப்படிப்பினை வழங்கும் தகுதியும் வழங்கப்பட்டது. 1940ஆம் ஆண்டில் கண்டி திருப்பீட நிறுவனம் (Pontificium Athenaeum Kandiense – Pontifical Institute of Kandy) எனும் உயர் கௌரவமும் வழங்கப்பட்டது.

❖ கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச பேராயராக 1947இல் நியமனம் பெற்றவர் அமலமரித் தியாகிகள் துறவற சபையினைச் சார்ந்த பேரருட்திரு தோமஸ் பெஞ்சமின் குரே (Thomas Benjamin Cooray) ஆவார். இவர் 1965ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது கருதினாலாகவும் நியமனம் பெற்றார்.

❖இலங்கையின் முதலாவது சுதேச மறைமாவட்டக் குருக்களிலிருந்து ஆயராகியவர் பேரருட்திரு அந்தோனி டி சேரம் (Antony de Seram) ஆண்டகையாவர். இவர் 1963ஆம் ஆண்டில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக (Auxiliary Bishop) நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கையுட்பட கிழக்கிந்திய நாடுகளுக்கு திருத்தூதரக பிரதிநிதியாக (Apostolic Delegate) முதன் முதலில் பேராயர் அந்தோனியோ அலியார்டி (Antonio Agliardi) என்பவர் 1884ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.

❖ கொழும்பினை வதிவிடமாகக்கொண்டு இயங்கக்கூடிய இலங்கைக்கு மாத்திரமான திருத்தூதரக பிரதிநிதியாக பேராயர் லூசியானா ஸ்ரோரேரோ (Luciano Storero) என்பவர் 1969ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.

❖ இலங்கை நாட்டின் முதலாவது திருத்தூதரக திருந்தந்தையின் பிரதிநிதியாக (Apostolic Pro-Nuncio) பேராயர் கார்லோ கூரிஸ் (Carlo Curis) அவர்கள் 1976ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டார்.

# திருச்சிலுவை உயர்த்தப்பட்ட நாள்



கி. பி. 614ம் ஆண்டு பெர்சியா நாட்டு அரசன் மூன்று பெரும் படைகளைத் திரட்டி மெசப்பெத்தேமியா நாட்டிற்குச் சென்று அதை வென்றான். இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்களை யூதருக்கு அடிமைகளாக விற்றான். எருசலேமிலிருந்த திருச்சிலுவையையும் எடுத்துக் கொண்டு தனது நாட்டிற்குச் சென்றான். கொன்ஸ்தாந்து நோபிளின் புனித அரசரான ஹெராக்ளியஸ் என்பவர் பல நாட்களாக உண்ணா நோன்பிருந்து பெர்சிய நாட்டின் மீது படை எடுத்துச் சென்றார். அவர்களை வென்று கி. பி. 627ம் ஆண்டு திருச்சிலுவையை மீட்டுக் கொண்டு வந்தார். திருப்பாடல்களைப் பாடிக் கொண்டும் செபித்துக் கொண்டும் ஊர்வலமாகச் சென்று தேவாலயத்தில் திருச்சிலுவையை நாட்டினார்.



கிறிஸ்துவை மாணவரில் உருவாக்குவதே,
மாணவரைக் கிறிஸ்தவர்களாக
(கிறிஸ்து + அவர்களாக)
உருவாக்குவதே மறைக்கல்வியின் பணி.
என் பிள்ளைகளே உங்களில் கிறிஸ்து
உருவாகும் வரை உங்களுக்காக நான்
மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்.
(கலா 4 : 19)

மாணவர் முறையாக வாழவும்
வழிபடவும் வழிவகுப்பது
மறைக்கல்வியின் உள்ளார்ந்த
பொறுப்பாகும்.
( இ. ம.அ. 23)

திருவழிபாட்டு
கொண்டாட்டங்கள்
ஒவ்வொன்றும் மறைக்கல்வி
அளிப்பனவாக இருக்க
வேண்டும். (இ. ம. அ. 23)

நம்பிக்கை வளர்ச்சியையும் கிறிஸ்தவ
வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி
வளர்ப்பதே மறைக்கல்வியின் பணி
(ஆயர் பேரவை 1978)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச குருக்கள் தின சிறப்புத் திருப்பலி நிகழ்வுகள்

**“யாரை நான் அனுப்புவேன் நமது பணிக்காகயார் போவார்”**

பாலையூற்றுப் பங்கு


2019ஆம் ஆண்டிற்கான சுதேச குருக்கள் துறவியர் தினத்தை 'நீங்கள் நீங்களல்ல கிறிஸ்துவே என்னும் தலைப்புடன் ஆடி மாதம் 28 ஆம் திகதி காலை 8 மணித்திருப்பலியை திருப்பாலத்துவ சபை ஊக்குனர்கள் சிறார்கள் சேர்ந்து சிறப்பித்தார்கள்.


❖ அன்றைய நாளுக்கான காணிக்கைகள் அனைத்தும் அருட்தந்தை, அருட்சகோதரிகளால் சேகரிக்கப்பட்டு அர்த்தமுள்ள வகையில் சிறப்பிக்கப்பட்டது.

❖ திருப்பலியின் நிறைவில் அருட்தந்தை, அருட்சகோதரிகள் பீடத்திற்கு பவனியாக அழைத்து வரப்பட்டு அவர்களின் பணியின் மகத்துவம் பற்றி தெளிவாக கூறப்பட்டு அனைவரும் அவர்களை வாழ்த்தவும் அவர்களுக்காக செபிக்க வேண்டுமெனவும் வலியுறுத்திக் கூறப்பட்டது

❖அருட்தந்தை, அருட்சகோதரிகளுக்கு மாலை அணிவிக்கப்பட்டு சிறார்களால் ஊக்குனர்களுடன் இணைந்து தயாரிக்கப்பட்ட வாழ்த்துமடல்களும் வழங்கப்பட்டதுடன் சிறிய அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

❖தொடர்ந்து அன்றையநாள் திருப்பலி நிறைவில் மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தப்பட்டு சிறார்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் வைக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.





# தூய சதாசகாய அன்னை ஆலயம் அன்புவழிபுரம்



தூய சதாசகாய அன்னை ஆலயத்தின் திருப்பாலத்துவ சபையினரால் கடந்த 28.7.2019 ஆம் திகதி அன்று சுதேச குருக்களுக்கான தினம் சிறப்பிக்கப்பட்டது. அன்றைய நாளில் முதல் நிகழ்வாக திருப்பாலத்துவ சபை சிறார்கள், ஊக்குனர்கள் குருவுடன் இணைந்து விளக்கேந்தியவர்க்ளாய் வருகைப்பவணியில் கலந்துகொண்டு அன்றைய திருப்பலியில் பக்தியுடன் கலந்து சிறப்பித்தார்கள். அன்றைய திருப்பலிக்கு அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை பெனடிக் இயூஜின் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். திருப்பலி நிறைவில் அருட்தந்தையர்கள் எமது பிள்ளைகளுக்கு சுதேச குருக்கள் துறவறத்தோர் என்றால் யார்? நாம் எப்படி எம்மை ஆன்மீக ரீதியில் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் எமது குடும்பங்களில் இருந்து ஒரு சிலரையாவது இறைபணிக்காக அர்ப்பணிக்க நாம் செபிக்க வேண்டும் என்றும் நாமும் இறையன்பிலும் பிறருக்கு முன்மாதிரிகையான பிள்ளைகளாக வாழ வேண்டும் என்றும் கூறினார். இதனைத் தொடர்ந்து எமது சிறார்கள்ால் தயாரிக்கப்பட்ட வாழ்த்து அட்டைகள் வழங்கப்பட்டதுடன் எமதுபங்கில் பணியாற்றியகுருக்கள் துறவியர்கள், எமது மறைமாவட்ட இயக்குனர் அவர்களுக்கும் இவ் வாழ்த்து அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அன்றைய நிகழ்வினைத் தொடர்ந்து குழுப் புகைப்படம் எடுக்கப்பட்டு சுமார் 9.45 மணியளவில் அவ் நிகழ்வானது நிறைவுற்றது.

# தூய யூதாததேயு ஆலயம் - இலிங்கநகர்







தூய யூதாதயூ ஆலய திருப்பாலத்துவ சபை சிறார்களால் ஊக்குனர்களின் வழிகாட்டலில் 2019.07.28 ஆம் திகதி காலை 7.15 மணியளவில் எமது மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்தந்தை சேவியர் ரஜீவன் அவர்களின் வருகையில் திருப்பலி ஆரம்பமாகியது. இத் திருப்பலியை சிறார்கள் சிறப்பித்தார்கள். திருப்பலி நிறைவுற்றதும் எமது சிறார்களால் ஊக்குனர்களின் வழிகாட்டலில் தயாரிக்கப்பட்ட சுதேசகுருக்கள் தினத்திற்கான வாழ்த்து மடல்கள் இயக்குனர் அவர்களிற்கு சிறார்களால் வழங்கப்பட்டதுடன் இயக்குனருடன் சேர்ந்து குழுப்புகைப்படமும் எடுக்கப்பட்டது.

சுதேச குருக்கள் தினத்தை மேலும் சிறப்பிக்கும் முகமாக 2019.08.12 ஆம் திகதியன்று இலிங்கநகர் ,செல்வநாயகபுரம், பங்குகளைச் சேர்ந்த திருப்பாலத்துவ சிறார்களும், ஊக்குனர்களும் இணைந்து திருப்பாலத்துவ சபை மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வெல்வெரி தூய யாகப்பர் ஆலயத்தில் காலை 9.30 மணியளவில் ஒன்று கூடினர். தொடர்ந்து சிறார்களும், ஊக்குனர்களும் ஆலயத்தினுள் சென்று அமைதியாக பிரார்த்தனை செய்தனர். அதனைத் தொடர்ந்து காலைவேளை உணவிற்கான சிறிய இடைவேளை வழங்கப்பட்டதுடன் அருட்தந்தை சொய்சாஅவர்களின் தலைமையில் அன்றைய நாளுக்குரிய அனைத்து நிகழ்வுகளும் ஆரம்பமாகியது. செல்வநாயகபுர பங்கில் இருந்து 33 சிறார்களும், 6 ஊக்குனர்களும், இலிங்கநகர் பங்கில் இருந்து 13 சிறார்களும், 3 ஊக்குனர்களும் என மொத்தமாக 55பேர் கலந்து கொண்டார்கள். காலை 10 மணியளவில் நிகழ்வுகள் அனைத்தும் ஆரம்பமாகின. முதலில் பாலர் வகுப்பு, தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கு டொபி எடுத்தல் போட்டி நடைபெற்றதுடன், தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான பலூன் உடைத்தல் போட்டியும் நடைபெற்றது. தரம் 6, தரம் 7, தரம் 8 தரம் 9, தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கு பந்து வீச்சில் இருந்து தப்புதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றதுடன் அனைத்து சிறார்களுக்குமாக பொதுவாக நடனப்போட்டியும் நடைபெற்றது. இவ் அனைத்துப் போட்டிகளிலும் முதல் 3 இடங்களையும் பெற்ற சிறார்களுக்கு நிகழ்வின் இறுதியில் பரிசில்கள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து எமது முன்னால் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்தந்தை S.S. ஜோன்பிள்ளை அவர்கள் வருகை தந்து சிறார்களை உற்சாகப்படுத்தி அவர்களுக்கு டொபிகளை வழங்கி வைத்தார். பின்னர் செல்வநாயகபுர பங்குத்தந்தை அருட்தந்தை றொய்சன் ஸ்பாக்ஸ் அவர்களும் வருகை தந்து சிறார்களை உற்சாகப்படுத்தினார் என்பதுடன், எமது மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அவர்கள் வருகை தந்து சிறார்களுக்கு சுதேச குருக்கள் என்றால் யார்? என்பது பற்றியும், புனிதர்கள் பற்றியும் சிறப்புரையாற்றி சிறார்களிடம் வினாக்களை கேட்டும் சரியாக விடையளித்தவர்களுக்கு ஜெபமாலையும், வர வணிக்கங்களையும் வழங்கியதுடன் சிறார்களுக்கு மதிய உணவுவேளைக்குப் பின் குடிப்பதற்காக ஜோக்கட்டையும் வழங்கி வைத்து சிறார்களுடன் இணைந்து ஒன்றாக இருந்து மதிய உணவு உண்டு சிறார்களை உற்சாகப்படுத்தி விடைபெற்றார்.





தொடர்ந்து சிறார்களுக்கான நிகழ்வுகள் நடாத்தப்பட்டு சுமார் 4.30 மணியளவில் அனைத்து நிகழ்வுகளும் நிறைவுபெற்றன. இன் நிகழ்வுகள் அனைத்திற்கும் அன்பளிப்புகளை வழங்கிய அருட்தந்தை சொய்சா அவர்களுக்கும் வருகை தந்து சிறார்களை உற்சாகப்படுத்திய செல்வநாயகபுர பங்குத்தந்தை, முன்னைநாள் இன்நாள் இயக்குனர்கள் அனைவருக்கும் எங்கள் சிறார்கள் ஊக்குனர்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் உங்களை எங்கள் ஜெபங்களிலும் சேர்த்துக் கொள்கின்றோம்.

- இயக்குனர், ஊக்குனர்கள்- திருப்பாலத்துவ சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவைத் தேடியே............

அருட்பணி N.C. அருள்வரதன்



உள்ளத்தின் தூய்மைகளை
உயர்வெனக் கொண்டே நாமும்
செயலாற்றும்போது நமது
வாழ்வது உயர்வாகும் உண்மையே

பகைமைகள் பேதங்கள்
வாழ்வுக்கு ஏற்றவைகளல்லவே
மன்னிப்பும் ஏற்கும் மனஉணர்வும்
மனித மாண்பினை உயர்த்துமே

நமக்குள் உறவுகளில்லையேல்
நமக்கு விடிவே இல்லையே அதனால்
இறையன்பின் வழிகளைத் தொடர்வோமானால்
வெற்றியின் நிலைகளைக் காண்போமே

பகைமைகளைப் பெருக்குவதால்
நிறைந்த நிலைகள் தோன்றிடுமா
உயர்ந்த நிலைகளை நாம் காண
உறவுகளை வளர்ப்பதே உயர்வாகும்

பேதங்கள் ஏற்றதாழ்வுகள் இவைகளால்
வாழ்விலே உயர்வுகள் தோன்றாது
அனைவரையும் அன்போடு ஏற்பதாலே
வளமான உறவுகள் தோன்றுமே

## குட்டிக்கதை ஒன்று

Fr. N.C



இரண்டு நண்பர்கள் நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு இருவரும் சந்தித்திருக்கிறார்கள் ஒருவர் பல வருடங்களாக வெளிநாட்டிலே இருந்துவிட்டு இப்போது தான் வந்திருக்கிறார். இங்கு இருப்பவர் மிகவும் வறுமையான நிலையிலே இருக்கிறார். அதுமட்டுமல்ல, உடல்நோயும் கூட. நோயைக் குணமாக்க அதிக பணம் தேவைப்பட்டது. அந்த அளவிற்கு அவரிடம் பணம் இல்லை.

நோயுற்றிருக்கும் நண்பனைப் பற்றி கேள்விப்பட்ட வெளிநாட்டிலிருந்து வந்த நண்பன் அவரைப் பார்க்க அவரது வீட்டிற்குச் செல்கிறார்.

நோயுற்றிருக்கும் நண்பனுக்கு தன்னைத்தேடி வந்த நண்பனைக் கண்டதும் பெரும் மகிழ்ச்சியாய் இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் கட்டி அணைத்துக் கொள்கிறார்கள். அப்படியாக ஆரம்ப காலத்திலே அன்பாகப் பழகியவர்கள்.

எல்லாவற்றையும் கேட்டறிந்து கொண்ட வெளிநாட்டு நண்பன் நோயுற்றிருக்கும் தனது நண்பனைப் பார்த்துச் சொல்கிறார். 'நீ கவலப்பட வேண்டாம். உன்ர வைத்திய செலவ நான் தாறன். உடனடியாக ஆரம்பிப்போம் சரியா'

தனது நண்பன் சொன்னதைக் கேட்டதும் நோயுற்றவர் வாய் விட்டு அழுதார். வீட்டிலும் மற்றவர்கள் சேர்ந்து அழுதார்கள்.

இத்தனைதூரம் தேடிவந்து உதவி செய்ய முன்வந்தது பெரும்பாக்கியமானதே. எல்லாருக்கும் பெரும் சந்தோஷமாக இருந்தது.

'அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்' என்பதை வெளிக்காட்டி விட்டாரல்லவா.

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



## 07. கொள்கையுடன் வாழ்தல்

நாம் எமது வாழ்வில் மற்றவர் எமக்குச் செய்யும் ஒவ்வொரு செயல்களுக்கும் பழி வாங்குவதைப் போன்ற பிரதிச் செயலைச் செய்யாதிருப்பது நன்று. உயர்ந்த கொள்கையோடு செயல்படப் பழகிக் கொண்டால் இந்த நல்லபழக்கம் அன்றாட வாழ்வில் எமக்குள் உருவாகிவிடும். அன்றாட வாழ்வில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் அந்த நிகழ்ச்சிக்கோ அல்லது அச்சூழலுக்கோ அகப்படாது உள்ளாள விடுதலையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இவ்வாறு பழிவாங்காது நிகழ்ச்சிக்கு உள்ளாள விடுதலையுடன் நிகழ்ச்சியில் பிரதிச்செயலைக் காட்டுவதை, கொள்கையுடன் வாழ்தல் என இங்கே குறிப்பிடுகிறேன். அதாவது தனது உயர்ந்த கொள்கையைக் கைவிடாமல் சூழலுக்கு அகப்படாது அச்சூழலைக் கட்டுப்படுத்தும் நிலையாகும்.

பெரும்பாலும் நாம் எமது சூழ்நிலைகளால் கட்டுப்படுத்தப்படுகிறோம். எமது சூழல் நன்றாக செயற்படும் போது நல்லதை உணர்கின்றோம். சூழல் தீமையானதாக இருக்கும்போது நாம் தீயதை உணர்கின்றோம். ஆனால் சூழல் எப்படிப்பட்டதாக இருப்பினும் அந்தச் சூழலுக்கு அகப்படாது மனதிற்கு மகிழ்ச்சியை உண்டாக்கிச் செயற்படும்போது சூழ்நிலைகள் எம்மை ஆட்கொள்வதில்லை. இல்லையேல் சூழலுக்கு அகப்பட்டுத் தீமையான பிரதிச் செயலைச் செய்பவர்கள் ஆகிவிடுவோம்.

ஒருநாள் ஒரு மனைவி தனது கணவனை ஏசினாள். ஆனால் கணவனோ தனது உள்ளத்தில் கலவரப்படவில்லை. மாறாக நான் எனது மனைவியை எதிர்த்துப் பேசுவதில்லை என்ற தீர்மானத்தோடு உள்ளாள விடுதலையுடன் அமைதியோடு அவளுக்குச் செவிசாய்த்தான். பழிவாங்கும் பிரதிச்செயலைக் கணவன் காட்டாது கேட்டுக் கொண்டிருந்ததால் மனைவி தனது கோபம் குறையும் வரை ஏசிவிட்டு நிறுத்தி விட்டாள். ஏசி முடிந்ததும் கோப உணர்வு நீங்கி விடுதலையை அனுபவித்தாள். கணவனும் பதிலுக்குப் பதில் ஏசியிருந்தால் குடும்பத்தில் பெரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கும்.

எமது வாழ்வில் பயனுள்ள பெறுமதியுள்ள கொள்கைகளை வழிகாட்டியாகவும் நங்கூரமாகவும் பாவிக்கும் பொழுது நாம் சூழலை ஆட்கொள்கின்றோம். இல்லையேல் சூழல் எம்மை ஆட்கொண்டு விடும். சூழ்நிலைகள் மாறக்கூடியவை. சிலவேளைகளில் கசப்பான சூழல் ஏற்படும். அதே இடத்தில் மகிழ்ச்சியான சூழலாக மாறிவிடும் ஆனால் பெறுமதிகள் மாறுவதில்லை.

மகாத்மாகாந்தி தனது வாழ்வில் நல்ல பெறுமதிகளுடன் வாழ்ந்தார்.

1. அநீதிக்குத் தலைவணங்க மாட்டேன்.
2. பொய்யை உண்மையால் வெற்றிகொள்வேன்.
3. உண்மையைக் காக்க எந்தக் கஷ்டத்தையும் அனுபவிப்பேன்.

இப்படிப்பட்ட நல்ல பெறுமதிகளோடு காந்திமகான் வாழ்ந்தார். நல்ல பெறுமதிகளைத் தீர்மானித்து அதைப்பற்றிக் கொண்டு அதன்படி வாழ்ந்தார். அதுவே அவர்களுக்குச் சக்தியைக் கொடுத்தது.

பெரும்பாலும் சிலர் தமது கொள்கையின்படி நிகழ்ச்சிகளில் பதில் கொடுப்பதில்லை. சூழலுக்கேற்பவே பதில் கொடுப்பார்கள். சிலர் தம்மிடம் வந்து அன்போடு கேட்கும் போது தமது கொள்கையைக் கைவிட்டுச் செயற்படுவர். அதாவது காரியாலயத்தில் தனக்குப் பிடித்தவரிடம் ஒருமாதிரியும் பிடிக்காதவர்களுடன் மற்றொரு மாதிரியும் நடந்து கொள்வது கொள்ளையுடன் வாழுவதாகாது. எமது வாழ்வில் எமது செயல்கள் ஒவ்வொன்றுக்கும் நாமே பொறுப்பாளிகள். சூழ்நிலையை அல்லது மற்றவர்களைக் குறை கூறுவது பொருத்தமில்லை. மற்றவர் என்ன நினைப்பாரோ என்று நான் இப்படிச் செய்தேன் என்று குறை கூறுவது கொள்கையோடு வாழ்பவரின் நல்ல பிரதிச் செயலல்ல

மகாத்மாகாந்தி கொள்கையோடு வாழ்ந்து வரும் போது அது அவருக்குச் சக்தியைக் கொடுத்தது. ஆளுக்கேற்ப நிகழ்ச்சிக்கேற்ப செயற்படாது கொள்கையுடன் செயற்பட்டார்.

நாமும் நல்ல கொள்ளைகளைத் தெரிவு செய்து வாழ முயலுவோம். சூழலுக்கு அடிமைப்படாது, சூழலுக்கேற்ப எமது பிரதிச் செயலைக் காட்டாது நல்ல கொள்கையோடு வாழ்ந்து எமது வாழ்வைச் சிறப்பாக்குவோம்.

நான் எப்போது கொள்கையுடன் செயற்படுகின்றேன். எப்போது செயற்படவில்லை என்பதை அறிவது நன்று. அதுவே வெற்றிக்கு வழியாகும்.

தொடரும்..........

நன்றி.


## சிந்திக்க....... சிரிக்க............

செய்ய முடியும் என்று நம்பு. ஒன்றைச் செய்ய முடியும் என்று நீ முழுதாய் நம்பும் போது உன் மனம் அதைச் செய்து முடிக்கும் வழிகளைக் கண்டறியும்.
ஒரு காரியத்தில் வைக்கும் நம்பிக்கை, அந்தக் காரியத்தை முடிக்கும் வழியையும் காட்டுகிறது.



செல்லம், உனக்கு தீபாவளிக்கு சேலை எடுத்து தரவா சுடிதார் எடுத்து தரவா?
உங்களுக்கு எது துவைக்க ஈஸியா இருக்கோ, அதையே எடுத்து குடுங்க.

நீங்கள் ஒவ்வொரு தடவையும் தோற்கும் போதும் நாம் இன்னும் பெரிய செயல்களில் வெற்றியடையப் போகிறோம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்



வாழ்க்கையில் நாம் உயர்வதும் தாழ்வதும் நாம் மேற்கொள்ளும் அணுகுமுறை ஒன்றிலே தங்கியுள்ளது.



25 வருஷத்துல ஒரே ஒரு தடவ தான் உங்க கணவர்கிட்ட சண்ட போட்டீங்களா
ஆமா அன்னைக்கு வீட்ட விட்டுப் போனவர் தான். 25வருஷமா திரும்பி வரவே இல்லையே

கனவு காணுங்கள். ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னைத் தூங்க விடாமல் பண்ணுவது எதுவோ அதுவே (இலட்சிய ) கனவு.
- அப்துல் கலாம்

தன்னை நல்லவராகக் காட்டிக் கொள்ள அடுத்தவரைக் கெட்டவராக சித்தரிக்கும் யாரும் [illegible] வாழ முடியாது......



முடிய சின்னதா வெட்டி விடுங்க !
எவ்வளவு சின்னதா வெட்டனும்?
என் பொண்டாட்டி கைல புடிபடாத அளவுக்கு .......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லூக்கா காட்டும் இயேசு

நால்வர் நல்கிய நற்செய்தியுள் தூய லூக்கா எழுதிய விழுமிய எழுத்தோவியம் ஏறத்தாழ 70 முதல் 80ஆம் ஆண்டுக்குள் வழங்கப்பட்டதாகப் புலனாகிறது. இறை இயேசுவின் பிறப்பு முதல் உயிர்ப்பு வரை இலக்கிய நடையுடன் கருத்து வளம் மிக்கதாக விளம்பும் இந்நற்செய்தி, மீட்பராகிய இயேசுவின் மீட்பு அனைவருக்கும் உரியது என்று தெரிவிக்கிறது. தனிச் சிறப்பு வாய்ந்த இறையியலுடன் திகழும் இந்நற்செய்தி ஏழைகள், பாவிகள், புறவினத்தார் ஆகியோருக்கு முதன்மையாகவும் உலகினர் அனைவருக்கும் பொதுவாகவும் தரப்படும் மீட்பராகிய இயேசுவின் செய்தியாகும் (2:11). இருபத்து நான்கு அதிகாரங்கள் கொண்ட இந்நற்செய்தியில் இயேசுவின் சொல்லும் செயலும் விரித்துரைக்கப்பட்டுள்ளன (4:14-19:27). ஆறு நூறாயிரம் யூதருள் பத்து விழுக்காட்டினராம் அறுபதினாயிரவர் ஏனையோரை அடக்கி ஒடுக்கி வாழ்ந்து வந்தனர்" அப்போது இறைவாக்கினர் எசாயாவின் (61:1-2) அருள்மொழிகளையே மேற்கோளாக்கி, இறையரசு பற்றிய அறிக்கையினை இயேசுபெருமான் வெளியிட்டார். "எளியோருக்கு நற்செய்தி சொல்லவும், "சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர்" என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்". (4:19).

**இரக்கமுடைமை**


இரக்கத்தின் நற்செய்தி, இறைப்புகழ் பாடும் நற்செய்தி, எருசலேமுக்கு முதன்மை தரும் நற்செய்தி, சமூக நீதியின் நற்செய்தி, செபத்தின் நற்செய்தி, தூய ஆவியாரின் நற்செய்தி, புறவினத்தாரின் நற்செய்தி, மகிழ்ச்சியின் நற்செய்தி, வரலாற்று நற்செய்தி என்று பல்வேறு பெயர்கள் பெறத்தக்கதாகவும் தனிச்சிறப்பு மிக்கதாகவும் இந்நற்செய்தி துலங்குகிறது. மேலை நாட்டுப் பாவலர் தாந்தே, லூக்கா எழுதிய நற்செய்தியை "இரக்கத்தின் நற்செய்தி" என்று போற்றிப் புகழ்ந்தார். வரலாற்றினை அடிப்படையாகக் கொண்ட இயேசுவின் வெளிப்பாடு பெரிதும் சிந்திக்கத்தக்கதாகும். அன்று வாழ்ந்த இயேசு இன்றும் வாழ்கிறார், நிகழ்கால மக்களோடும் பேசுகிறார் என்பதை இந்நற்செய்தி ஏடு தெளிவுறுத்துகிறது. ஏழைகளுக்காகவும் பாவிகளுக்காகவும் உரிமையற்றவர்களுக்காகவும் இயேசு பெருமான் வாழ்ந்து காட்டியுள்ளார். எளியோரிடம் இரக்கமும் பாவிகளிடம் பரிவும் மிக்கவராகத் திகழ்ந்த இயேசு பெருமான், 'தந்தை இரக்கமுள்ளவராக இருப்பதுபோன்று நீங்களும் இருங்கள்' (6:36) என்று மக்களிடையே போதித்து வந்தார்.

**வருத்தமும் திருத்தமும்**

" மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்தேன" (5:32) என்று அறிவித்த இயேசு, ஊரறிந்த பாவிக்கு உளமார மன்னிப்பு வழங்குகிறார் (7:36-50) " பாவிகளை வரவேற்று, அவர்களோடு உண்கிறார் (15:1)" குற்றம் செய்தவர்களை மன்னித்துவிடுமாறு அறிவுறுத்துகிறார்: "உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக கடிந்துகொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள். ஒரு நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கெதிராகப் பாவம் செய்து, ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து, "நான் மனம் மாறிவிட்டேன" என்று சொல்வாரானால் அவரை மன்னித்துவிடுங்கள்" என்றார் (17:4). மனம் மாறுவோரைக் குறித்து ஏற்படும் மகிழ்ச்சியினைக் காணாமற்போன ஆடு (15:1-7), காணாமற்போன பணம் (15:8-10), வருந்தித் திருந்தி வரும் ஊதாரி (15:11-32) ஆகிய நிகழ்ச்சிக் குறிப்புகளால் விளம்பியுள்ளார். வழிதவறி நடப்போர் மனம் வருந்தித் திரும்பும்போது இறைவன் பெரிதும் மகிழ்வார். காணாமற்போன ஆட்டைக் கண்டடைந்த ஆயன் மகிழ்வது போலவும், திருந்தி வந்த மைந்தனைக் கண்டு தந்தை மகிழ்வது போலவும் இறைவன் மகிழ்வார் என்பது குறிப்பிடத்தக்கது. சக்கேயு மனந்திரும்பி வருவதும் பரிகாரம் செய்ய விழைவதும் கண்ட இயேசு (19:1-10) "இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று தெளிவுறுத்தியுள்ளார்.

**எளியோரிடம் தனிப் பரிவு**

இறைவன் அனைத்து மக்களிடமும் இன்ப அன்பு பாராட்டுபவர், எனினும் ஏழை எளியவரிடமும் நோய்வாய்ப்பட்டோரிடமும் மிகுந்த பரிவு காட்டுகிறார். லூக்காவின் நற்செய்தி இதனை உயிரோவியமாகச் சித்தரித்துள்ளது. அருள் நிறைந்தவரான மரியாவின் புகழ்ப்பா குறிப்பிடத்தக்கதாகும் (1:46-55). "தாழ்நிலை நின்ற தம் அடிமையைக் கடைக்கண் நோக்கினார்" எனவும், "வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல் பல புரிந்தார்" எனவும், "தாழ்ந்தோரை உயர்த்தினார், பசித்தோரை நலன்களால் நிரப்பினார்" எனவும் மரியா மகிழ்ந்து பாடுகிறார். யூதேயா நாட்டுப் பெத்லெகேமில் சாமக் காவல் மேற்கொண்டிருந்த இடையருக்கு வானதூதர் வாயிலான மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியான மீட்பரின் பிறப்பு அறிவிக்கப்பட்டது. அவர்கள் குழந்தை இயேசுவை நேரில் கண்டு வணங்கி, விவரம் விளம்பினர். "மரியா இந்நிகழ்ச்சிகளை எல்லாம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக்கொண்டிருந்தார்" (2:19). எளியோர்க்கு நற்செய்தி அறிவிக்கவும் ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும் வருகை தந்துள்ளதாக இறைமகன் இயேசு மறைநூல் வாக்கின் வாயிலாக எடுத்துரைத்தார் (4:18-19).



**பேய் பிடித்தவரைக் குணமாக்குதல்**

கலிலேயா நாட்டுக் கப்பர்நகூம் செபக்கூடத்தில் இருந்த பேய் பிடித்த ஒருவரை மீட்டருளிய இயேசு அதிகாரத்தோடும் வல்லமையோடும தீய ஆவியை விரட்டினார் (4:36). முடக்குவாதம் கொண்டவரையும் (5:17-20) கை சூம்பியவரையும் (6:8-10) பரிவோடு இயேசு குணப்படுத்தினார். மேலும் மாபெரும் மக்கள் கூட்டம் இயேசு சொல்வதைக் கேட்கவும் தம் நோய் நீங்கிக் குணமாகவும் திரண்டிருந்தது. "தீய ஆவிகளால் தொல்லைக்கு உள்ளானவர்கள் குணமானார்கள். அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டு அனைவர் பிணிகளையும் போக்கியதால், அங்கு திரண்டிருந்த யாவரும் அவரைத் தொட முயன்றனர். (6:19) தொடர்ந்து போதிக்கும்போது, "ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர" ஏனெனில், இறையாட்சி உங்களுக்கு உரியதே. இப்பொழுது பட்டினியாய் இருப்போரே நீங்கள் பேறுபெற்றோர்" ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுதுகொண்டிருப்பவர்களே, நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள், (6:20-21) என்று எடுத்தியம்பினார் இயேசு. பரிசேயர் வீட்டுக்கு வருகைதந்த இயேசுவின் திருவடிகளில் கண்ணீர் பொழிந்து, அவற்றைத் தன் கூந்தலால் துடைத்து, முத்தமிட்டுப் பரிமளத் தைலம் பூசிய பாவியான பெண்ணை மன்னித்த இயேசு. "உம் நம்பிக்கை உம்மை மீட்டது, அமைதியுடன் செல்க" என்று அன்புடன் தெரிவித்தார் (7:50).

**அயலாருக்கு அன்பு**

சட்ட வல்லுநர் ஒருவர் இயேசுவிடம் "முடிவில்லாத வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும்?" என வினவினார். "இறையன்பும் பிறரன்பும் மிக்கவராகத் திருச்சட்ட நூலில் தெரிவித்தவாறே வாழ்வீராக" என்று இயேசு எடுத்தோதினார் (10)25-28), தொடர்ந்து நல்ல சமாரியர் கதையைக் கூறி, "இரக்கம் காட்டுபவரே அயலார்" என்று தெளிவுறுத்தினார் (10:30-37). பணக்காரத் தலைவன் ஒருவனிடம் "முடிவில்லா வாழ்வு பெற ஏழை எளியோருக்குச் செல்வத்தைப் பகிர்ந்து கொடுக்கத் தூண்டினார் இயேசு" (18:18-23)

**நிறைவுரை**

நயீன் நகரத்து விதவையின் மகன் இறந்தபோது, இயேசு பெரிதும் மனமிரங்கி, "இளைஞனே எழுந்திரு" என்று அன்புடன் அழைத்தார். இறந்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். தாயிடம் அவனை ஒப்படைத்தார் (7:11-15). இயேசு பெத்சாய்தா ஊருக்குச் சென்றபோது அவரைப் பின்தொடர்ந்த மக்களுக்கு இறையாட்சியை பற்றிப் போதித்து, குணமாக வேண்டியவரைக் குணமாக்கினார். பொழுது சாயத் தொடங்கவே பாழ்வெளியில் இருந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு உணவு வழங்கச் செய்தார். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பலுகச் செய்து பகுத்துண்டு பல்லுயிர் பேணிய செய்தி வியக்கத்தக்கது (9:10-17). "தாயினும் சாலப் பரிந்தூட்டும்" இயேசுவின் அருட்பெருக்கு நினையுந்தோறும் பேரன்பினைப் பொழிவதாகும். அளவற்ற அருளாளராகவும் நிகரற்ற அன்பாளராகவும் இறைவன் விளங்குவதை லூக்காவின் நற்செய்தி உணர்த்துகிறது. பதினெட்டு ஆண்டுகளாகப் பேயால் நோயுற்றிருந்த கூனிப் பெண்ணையும் (18:11-19) இயேசு இரக்கப் பெருக்கோடு குணமாக்கினார். செல்லுமிடம் எங்கும் ஏழை எளியவரிடம் இரக்கமும் பரிவும் மிக்கவராக ஊழியம் புரிந்தவர் இயேசு பெருமான், சிலுவையில் தம்மை அறைந்து கொல்லுவோரைக்கூட மன்னித்தருளும் மாண்பும் பொறுமையும் பொருந்தியவர் அவர் (23:24). அன்பே இறைவன் என்பதை லூக்காவின் நற்செய்தி நயமுற நவில்கிறது. எளியோரிடம் இரக்கமும் பாவிகளிடம் பரிவும் பெண்டிரிடம் பேரன்பும் கொண்ட இயேசு பெருமான் ஏழை எளியோரின் ஏற்தல் ஆவார்.

"அருண்மொழிச் செல்வர்"
முனைவர் பா. வளன் அரசு
பாதைகாட்டும் விவிலிய விருந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்

## திருவிவிலிய புதிர் போட்டி எண் : 39

## நெகேமியா அதிகாரம் 1 - 6 வரை

## விடைகள்



01. பாரசீகத் தலைநகரான சூசாவின் மன்னர் அர்த்தக்சஸ்தாவுக்கு (முன்னுரை)
02. தகர்த்தெறியப்பட்டது, தீக்கு இரையாக்கப்பட்டது (01:03)
03. யூதாவின் தலைவர்கள் (06:17)
04. கடவுளின் அருட்கரம் நெகேமியாவோடு இருந்ததால் (02:08)
05. 'ஏன் உன் முகம் வாடியுள்ளது' என்றார் (02:02)
06. உணவு, திராட்சை இரசம் (05:15)
07. ஆயிரம் முழம் (03:13)
08. ஒரு கையால் வேலை செய்தனர் மறுகையால் ஆயுதம் தாங்கினர்(04:17)
09. மக்களினங்களிடையே சிதறடிப்பேன் ( 01:08)
10. யூதா நாட்டிற்கு ஆளுநராக (முன்னுரை)

பங்குபற்றியவர்கள் : 46 பேர்

மிகச் சரியாக விடையளித்தோர் : 06 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு 500/- ரூபா
கோ. அபிஷா
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

2ம் பரிசு 300/- ரூபா
பி. இஷிக்கா
இல 33, திருவள்ளுவர் வீதி,
நாச்சிக்குடா
வெள்ளமனல்

3ம் பரிசு 200/- ரூபா
ஆர். பிறினோ சனாலி பெர்னான்டோ
ஆலய வீதி, மூதூர் - 03

**பாராட்டுக்குரியவர்கள்**

01. நே. சரணியா - கும்புறுப்பிட்டி
02. ஜொயாலா மகென்சி போல் - பாலையூற்று
03. கே. கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்

**பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியும், பாராட்டுக்களும்**

# மறைக்கல்வி கற்போம்

01. எமது மறைமாவட்டத்தின் முதலாவது அப்போஸ்தலிக்க பரிபாலரின் பெயர் என்ன?
    ❖ புனித ஜோன் கிறிஸ்ரோஸ்தம்
02. திருச்சிலுவை மகிமை (உயர்த்தப்பட்ட) திருவிழா எப்போது?
    ❖ புரட்டாதி 14
03. திருகோணமலை மறைமாவட்டத்தின் இறுதி இயேசு சபை ஆயர் யார்?
    ❖ அதி. வண. கிளேணி யே.ச ஆண்டகை
04. தூய ஆவியின் கொடைகளை எப்போது பெறுகின்றோம்?
    ❖ உறுதிப்பூசுதல் வழியாக
05. நம் ஒவ்வொருவரிடமும் தூய ஆவியார் என்ன செய்கிறார்?
    ❖ நம்முள் குடிகொண்டு நம்மைப் புனிதப்படுத்துகிறார். தந்தையோடும் மகனோடும் நம்மை இணைக்கிறார். இறைவனின் பிள்ளைகளுக்குரிய அன்புறவுடனும் சுதந்திரத்துடனும் நாம் வாழ நமக்கு ஆற்றல் அளிக்கிறார்.
06. தூய ஆவியார் மீது நமக்குள்ள கடமை என்ன?
    ❖ தூய ஆவியாருடைய தூண்டுதலுக்குப் பணிந்து அவர்மீது அன்பு கொண்டு, அவரது வழிநடத்தலுக்கு ஏற்ப நாம் வாழ வேண்டும்.
07. தூய ஆவியாரின் கனிகளின் அன்பு எவ்வாறாக இருக்கிறது?
    ❖ நிறை குறையோடு பிறரை ஏற்றுக் கொள்வது சுயநலம் இன்றி தியாகம் செய்வது.
08. இலங்கைத் திருஅவை தேசிய இளையோர் தினமாக நினைவு கூறுவது?
    ❖ புரட்டாதி 01ம் திகதி
09. திருச்சிலுவை எதன் அடையாளம்?
    ❖ கிறிஸ்து பாடுபட்டு, சிலுவையில் மரித்து நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்ததால் கிறிஸ்துவை குறிக்கும் பாடுபட்ட சிலுவை கிறிஸ்தவத்தின் ஆற்றலுள்ள அடையாளம்.
10. புனித கன்னி மரியாள் அரசியாக நினைவு கூறப்படும் நாள்?
    ❖ ஆவணி 22

# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி முடிவுகள்

## அன்னை மரியாள்

பங்குபற்றியவர்கள் : 54 சிறுவர்கள்



பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/- ரூபா
ஜே. ஜான்சி
64ம் கட்டை,
சகாயபுரம்.
மூதூர்

2ம் பரிசு 300/- ரூபா
ஜே. லுவிஸ் றெஜினோல்ட்
4ம் ஒழுங்கை, பெரியகுளம்
சாம்பல்தீவு

3ம் பரிசு 200/- ரூபா
ரி. ஜதுசன்
பீலியடி
கன்னியா

# மறைக்கல்வி கிறிஸதவர்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு இன்றியமையாதது



திருத்தூதர் பணிகள் நூலில் காணப்படும் முதல் கிறிஸதவர்களின் நடவடிக்கைகள் குறித்து கடந்த சில வாரங்களாக தன் புதன் மறைக்கல்வி தொடரை வழங்கி வரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித திருத்தந்தை ஆறாம் பவுல் அரங்கில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு, திருஅவையின் பிறப்பில் தூய ஆவியார், அதன் வளர்ச்சியில் இயேசுவின் சீடர்களின் பங்களிப்பு ஆகியவை குறித்து எடுத்துரைத்தோடு அரங்கில் குழுமியிருந்த அனைவருக்கும் தன் அப்போஸ்தலிக்க ஆசிரையும் அளித்தார்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி


# வெனிசிலோவில் 32 இலட்சம் சிறார்க்கு மனிதாபிமான உதவிகள்



வெனிசிலோ நாட்டின் நிலைமை தொடர்ந்து மோசமாகிக் கொண்டு வரும்வேளை அந்நாட்டில் ஏறத்தாழ 32இலட்சம் சிறார்க்கு மனிதாபிமான உதவிகளான உணவு இன்னும் மருத்துவ வசதி., சுத்தமான குடிநீர், கல்வி பெற போதிய வசதிகள் என்பன தேவைப்படுகின்றன என்று ஐ.நாவின் குழந்தைநல நிதி அமைப்பான யுனிசெப் கூறியுள்ளது.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

# துயர் பகிர்கின்றோம்



கடந்த காலங்களில் திருகோணமலையில் மறைக்கல்வி இயக்குனராகவும், மூதூர் பங்குத்தந்தையாகவும் பணியாற்றிய அருட்பணி. ஜே. எஸ். மொறயஸ் அவர்களின் தந்தை அமரர். செ. யோசேப்பு மொறாயஸ் (இளைப்பாறிய தபால் ஊழியர் - வங்காலை) அவர்கள் 27.08.2019 அன்று வங்காலையில் காலமானார். இவரின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைய மன்றாடுகின்றோம்.

இவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குனர், பணியாளர்கள்
மறைக்கல்வி நிலையம்,
திருகோணமலை மறைமாவட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித லூக்கா நற்செய்தி அதி 19 - 21 வரை

❖எவரும் பங்கு பற்றலாம்
❖போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
❖போட்டியாளர்கள் சரியான விடையளித்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. இயேசுவைப் பார்க்க அனுப்பட்ட சக்கேயு அவரைப் பார்ப்பதற்காக என்ன செய்தார்?
..................................................

02. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.
திருமுழுக்குக் கொடுக்கும் அதிகாரம் யோவானுக்கு.............................................. வந்ததா? அல்லது .................................... வந்ததா? என்று இயேசு கேட்டார்.

03. மானிட மகனின் வருகையின் போது காணப்படும் அடையாளங்கள் யாவை?
..................................................

04.இயேசு பகல் நேரங்களில் கோவிலில் கற்பித்து விட்டு, இரவு நேரங்களில் எங்கு தங்கி வந்தார்?
..................................................

05. ஒலிவம் என வழங்கப்படும் மலையருகில் உள்ள ஊர்கள் எவை?
..................................................

06.'இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று' என்று யார் யாருக்கு கூறியது?
..................................................

07. 'உள்ளவர் எவருக்கும் கொடுக்கப்படும் இல்லாதோரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்' இவ் வசனம் எந்த உவமையில் கூறப்பட்டுள்ளது?
..................................................

08. 'போதகரே உம் சீடர்களைக் கடிந்து கொள்ளும்' என்று இயேசுவிடம் கூறியவர்கள் யார்?
..................................................
..................................................

09. இயேசுவின் பேச்சில் குற்றத்தைக் கண்டு பிடிப்பதற்கு அனுப்பப்பட்டவர்கள் யார்?
..................................................

10. இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவர் என்பது பற்றி பழைய ஏற்பாட்டில் யாரால் எப் பகுதியில் கூறப்பட்டுள்ளது?
..................................................
..................................................

11. இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.
ஏனெனில் நானே உங்களுக்கு ..........................., ........................ கொடுப்பேன். உங்கள் எதிரில் எவராலும் உங்களை ..........................., ...............................முடியாது.

12. எருசலேம் கோவில் எவ்வாறு அழகுபடுத்தப்பட்டிருந்தது?
..................................................

13.அத்திமரம் தளிர்விடும் போது எக்காலத்தை அறிந்து கொள்ள முடியும் என இயேசு கூறுகின்றார்?
..................................................

14. மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கு என்ன செய்ய வேண்டும் எனக் கூறப்படுகின்றது?
..................................................
..................................................

15. எருசலேமை படைகள் சூழ்ந்திருப்பதைக் காணும்போது என்ன புலப்படுகின்றது?
..................................................
..................................................

பெயர் : ..................................................
பங்கு : ..................................................
முகவரி: ..................................................
..................................................

முடிவுத்திகதி : 15. 10. 2019

## அமைதியைக் காண்போம்....

அருட்பணி. N.C. அருள்வரதன்

இதோ கவிதை வரிகள் ...........
சரியாக வடிவமையுங்கள்

- ❖ மறைந்த அமைதி மீண்டும் வருவது உண்மையே
- ❖ ஆறுதலாகச் செயற்படவே
- ❖ அமைதி நிலையே நிலை கொள்ள எல்லோருமாய்
- ❖ அனைவரும் அன்போடு ஒன்றிணைந்தே
- ❖ தவறுகள் எங்கும் தொடராமல்
- ❖ நாட்டினை விட்டு மறைந்து விட்ட
- ❖ நல்லமைதி எங்கேயும் இல்லையே
- ❖ எங்கும் கலவரம் பகையுணர்வுகள்
- ❖ வெடித்து எங்கும் பரவும் போது
- ❖ அமைதியைக் காண்பது எப்படியோ

இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்


1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.10.2019

## கவிதை வரிகளை சரியாக வடிவமைத்தல் போட்டி

**சரியான கவிதை வரிகள்** அருட்பணி. N.C.அருள்வரதன்

**வாழ்வின் வெற்றி ......**

- ❖ எங்கும் அமைதியை மறவாமலே
- ❖ ஏற்ற வழிகளைத் தேடுவோமே
- ❖ போற்றும் வழிகளாய் அவை அமைய
- ❖ புனிதமாம் நிலைகளைத் தெரிவோமே
- ❖ கடினமாம் பாதைகள் என்றாலும்
- ❖ நிறைந்த நன்மைகள் தருமாதலால்
- ❖ மனச்சோர்வோ பின்னடைவோ இன்றியே
- ❖ வெற்றியின் நிலைகளைக் கண்டடைய
- ❖ நன்மையின் வழிகளை மறவாமலே
- ❖ நாம் செல்வோம் வெற்றி நமதாகுமே



பங்குபற்றியவர்கள் : 20 பேர்
மிகச் சரியாக வடிவமைத்தவர்கள் : 08 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு ரூபா 500/-
லோ. ஷனோத்
5ம் வட்டாரம்,
கும்புறுப்பிட்டி

2ம் பரிசு ரூபா 300/-
ச. பகீரதன்
676, அன்புவழிபுரம்,

3ம் பரிசு ரூபா 200/-
டொ. தர்சிக்கா
சுகாயபுரம்,
மூதூர்

## விசேட போட்டி - 2019
## புனித லூக்கா நற்செய்தி : அதிகாரம் 07 - 09 அதிகாரங்கள்
## போட்டி முடிவுகள்

**பங்குபற்றியவர்கள் : 49பேர்**
**சரியாக விடையளித்தோர் : 11பேர்**

பரிசு பெறுவோர்

1ம் பரிசு ரூபா 500/-
பெ. கொன்சலா
இல: 125, உட்துறைமுக வீதி,
உவர்மலை, திருகோணமலை

2ம் பரிசு ரூபா 300/-
பு. ரவிதா
இல 289/5, பீலியடி,
கன்னியா

3ம் பரிசு ரூபா 200/-
திருமதி. ஸ்ரெலா ஜெரோம்
6ம் வட்டாரம்,
சாம்பல்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்

# விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 32
# போட்டி முடிவுகள்

கலந்து கொண்டோர் : 76 பேர்
சரியாக விடையளித்தோர் : 64 பேர்

## பரிசுக்குரியோர்

1ம் பரிசு 500/- ரூபா
டொ. தர்ஷிகா
சகாயபுரம்
மூதூர்




2ம் பரிசு 300/- ரூபா
டெனிசன் கீதாஞ்சலி
இல 690, கன்னியா வீதி,
பாரதிபுரம்,
திருகோணமலை

3ம் பரிசு 200/-ரூபா
போல் பிரகாஷ் பிரவின் கோர்டன் ஸ்மித்
இல 24/5, கோணேசபுரம்,
உவர்மலை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | து | ணி | வு | | நி | றை | வு | | |
| ம | னி | த | உ | ரு | வி | ல் | தோ | ன் | றி |
| | வெ | | ம | ன | நி | றை | வோ | டு | |
| தி | ற் | | மே | வு | நா | லா | ல் | எ | ன |
| மை | றி | வ | ழி | வ | கு | க் | கு | ம் | மா |
| அ | வா | | | மை | லை | நி | | | ய |
| றை | கை | ள் | க | ன் | ய | ப | ற் | ந | தா |
| இ | | தொ | ட | க் | க | மு | த | ல் | ஆ |
| | தா | ழ் | வு | க் | கு | ரி | ய | | |
| சி | றை | ப் | ப | ட் | டு | ள் | ளே | ன் | |

01. தொடக்க முதல்
02. துணிவு
03. மனித உருவில் தோன்றி
04. தாழ்வுக்குரிய
05. இறை அமைதி
06. நற்பயன்கள்
07. நிலைமை
08. வழி வகுக்கும்
09. சிறைப்பட்டுள்ளேன்
10. எல்லா நாவுமே
11. ஆதாயமான
12. வெற்றி வாகை
13. மனநிறைவோடு
14. நிறைவு



## பாராட்டுக்குரியவர்கள்

01.Fr. J. சுதர்ஷன் - கன்னியா
02. P. கன்சன் - கன்னியா
03. R. ரிஷாந்த் - கன்னியா
04.த. அன்ரனி பிரிஸ் - கன்னியா
05. R. விக்டோரியா - கன்னியா
06. பி. விஷோபா - கன்னியா
07. டெய்சிராணி - கன்னியா
08. P. ரவிதா - கன்னியா
09. S. லிந்துகன் - கன்னியா
10. செ. தனுஷிகா - கன்னியா
11. ஜீ. ஷெபானா ஆன் - கன்னியா
12.S. நிவேதிக்கா - கன்னியா
13. R. டிலக்ஷனா - கன்னியா
14. லியான்ஷிக்கா - கன்னியா
15. தே. சமில்டன் - நிலாவெளி
16. ப. சிறோமிக்கா - இருதயபுரம்
17. J. ஜான்சி -சகாயபுரம்
18. J. நான்சி -செல்வநாயகபுரம்
19.J.தனராஜா -அன்புவழிபுரம்
20. ஜீ.கியூரி ஜஸ்டினா -சீனன்குடா
21. து. டிலாணி - இருதயபுரம்
22. அ. நியோலின் - குவாடலூப்பே
23. வெ. கெவின் சேகித் - கும்புறுப்பிட்டி
24. க. தனுஷா - கும்புறுப்பிட்டி
25. திரேசா சேவியர் - பேராலயம்
26. J. தேவேஷ் - நிலாவெளி
27. சு. வெவோஷன் -நிலாவெளி
28. விடோனா -நிலாவெளி
29. நியோலின் -குவாடலூப்பே
30. பே. டிவேஞ்சன் -அன்புவழிபுரம்
31. R. கெனாஷ் - நிலாவெளி
32. K. பவிஷன் - இருதயபுரம்
33. F. பிரசில்டா - இலிங்கநகர்
34. D. ஆன் பிரசில்டா - இலிங்கநகர்
35. A. கிரிசாளினி - இருதயபுரம்
36. சு. கௌசல்யா - பாலையூற்று
37. சு. கிப்ஷன் - நிலாவெளி
38. சா. செல்ஷியா - சீனக்குடா
39. அபிராமி - பாலையூற்று
40. சு. பிராங்ளின் - குவாடலூப்பே
41. பயஸ் லக்ஷி - இருதயபுரம்
42. சு. அர்னோன் - சகாயபுரம்
43. ர. அக்ஷே - உவர்மலை
44. லெ. ஷெரோன் கெவின் - நிலாவெளி
45. ரா. கிஷானி - நிலாவெளி
46. அ. கரோலினி - பேராயலம்
47. தோ. கனிசியஸ் பேபியன் - நிலாவெளி
48. ஆ. யூலி சாலினி - சகாயபுரம்
49. M. நொயலின் - நிலாவெளி
50. I. தஷானி - இருதயபுரம்
51. R. எமில்ராஜ் - செல்வநாயகபுரம்
52. சு. சுவேக்கா - பாலையூற்று
53. கோ. அபிஷா - கும்புறுப்பிட்டி
54. டெலிஷா நெவில்ராஜ் - கும்புறுப்பிட்டி
55. K. கிறிஸ் யஸ்வின் - செல்வநாயகபுரம்
56. N. டெரன்சியா - இருதயபுரம்
57. M. றோஸ்மலர் - கன்னியா
58. Y. டினுஷாந்தினி - இருதயபுரம்
59. K. பவிஷன் - இருதயபுரம்
60. டனிற் ஷெரோன் நெவில்ராஜ் - குவாடலூப்பே
61. ஜே. சுதாஸ் ஸ்டீவ் ஆகாஷ் - இலிங்கநகர்

# சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்

01



## நல்ல ஆயன்

02



❖ பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
❖ திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
❖ 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்
1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ..........................................................
முகவரி ..........................................................
பங்கு ..........................................................
தரம் ..........................................................

முடிவுத் திகதி 15.10.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
11
.
01
.
1942



உதிர்வு
13
.
07
.
2019

## அமரர். அன்ரனி இம்மானுவேல்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

பட்டுச் சரிந்த மொட்டை மரமாய்
சொத்து சுகம் வற்றிப்போன இளமைக்காலம்
தன்னை வருத்தித் தன் குடும்பம் தளைக்க
ஓய்வின்றி உழைத்த மாமா!
பற்றிப் பிடித்த படர்ந்த பூக்கள் எம்மை
விட்டுப் பிரிந்த தியாகச் சுடரே !
விழி ஓரம் வழிந்தோடும்
கண்ணீரில் வலி சுமந்து
வாடுகின்றோம் மாமா!
உம் ஆன்மா அமைதியுற
இறைவனை நாங்கள்
இறைஞ்சுகின்றோம்.
ஆமென்.

பிரிவால் நினைந்துருகும்
**குடும்பத்தினர், உற்றார் உறவினர்**
லோவர் வீதி, உவர்மலை, திருகோணமலை

## ஜேர்மனியில் அமைதிக்காக மதங்களின் உலகளாவிய கூட்டம்





Dr. William F. Vendley
Co-Moderator for First Panel Session
"Manifesto 'The World. The XXI century' as a Concept of Global Security"

அமைதிக்கான மதங்களின் 10வது உலகளாவிய கூட்டத்தில் 17 மதங்களின் முக்கிய பிரதிநிதிகள் உட்பட பொதுநலனில் அக்கறையுடைய ஏறத்தாழ 900 பேர் கலந்து கொள்கின்றனர்.

ஆகஸ்ட் 13 நடைபெற்ற இக்கூட்டத்தில் இப்பூமியைப் பாதுகாப்பதற்கு பல்சமய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் புதிய உலக அவை உருவாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிக்கான மதங்கள் என்ற உலகளாவிய அமைப்பு 1970ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது பல்வேறு கண்டங்களில் உள்ள சமயத் தலைவர்களின் முக்கிய பிரதிநிதிகள், இன்னும் 90க்கும் அதிகமான தேசிய குழுக்கள், பல்சமய இளையோர் அமைப்பு மற்றும், மதம் சார்ந்த பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. மேலும் 2013ம் ஆண்டில் வியன்னாவில் நடைபெற்ற அமைதிக்கான மதங்களின் ஒன்பதாவது கூட்டத்தில் 600பேர் கலந்து கொண்டனர்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# 25ஆம் ஆண்டு
## குருத்துவ வெள்ளிவிழா





பெயர் : அருட்தந்தை பிலிப்பையா ஜேக்கப் யோகராஜ் அ.ம.தி
தந்தை பெயர் : எலியாஸ் பிலிப்பையா
தாய் பெயர் : பிலிப்பையா கத்தறீன்
பிறப்பு : 25.07.1964
ஆரம்பக்கல்வி : யாழ் / நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை. (தரம் 1-8 வரை)
இடைநிலைக்கல்வி : யாழ் / புனித பத்திரிசியார் கல்லூரி
குருமடம் : 10.01.1981 - புனித வளனார் சிறிய குருமடம் - கொழும்புத்துறை
1985 - 1988 மெய்யியல் . புனித சவேரியார் குருமடம் கொழும்புத்துறை
1988 - 1989 நவசந்நியாச மடம் - பண்டாரவளை
1989 - 1993 இறையியல் - தேசிய குருமடம் - கண்டி
13.01.1994 - நித்திய அர்ப்பணம் அமதிகள் தலைமைச் செயலகம் மட்டக்குளி - கொழும்பு
14.01.1994 - தியாக்கோன் பட்டம் - புனித பற்றிமா அன்னை ஆலயம் மருதானை - கொழும்பு
குருத்துவம் : 19.09.1994 - மேதகு ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை. (யாழ் மரியன்னை பேராலயம்)
பணித்தளம் : 1994 - 1995 - முதற்பணி - வைத்தியசாலை ஆன்மீகப்பணி யாழ் போதனா வைத்தியசாலை
1995 - 1997 : உதவிப்பங்குத்தந்தை - புனித அந்தோனியார் ஆலயம் (தெட்சணா மருதமடு - மன்னார்)
ஆன்மீகப்பணி - அகதிகள் முகாம்
1996 - 1999 : பிரதி பங்குத்தந்தை - சேமமடு, இளமருதங்குளம் - ஓமந்தை
1997 - 1997 : வைத்தியசாலை ஆன்மீகப்பணி - யாழ் போதனா வைத்தியசாலை
: நிதிப்பொறுப்பாளர் - தலைமைச்செயலகம் - (யாழ் மீள்குடியமர்வு).
1999 - 2005 : வவுனியா அமதி அகம் - மறையுரை பணி, நிதிப் பொறுப்பாளர்
வைத்தியசாலை ஆன்மீகப்பணி - வவுனியா மாவட்ட வைத்தியசாலை
2005 : பிரான்ஸ் - எக்ஸ் என் புறொவான்ஸ் அமதிகள் நிறுவுனரின் வாழ்க்கை அனுபவப் பயணம்
2005 - 2009 : பங்குத்தந்தை - ஓமந்தை வன்னி கனகராயன்குளம், இளமருதங்குளம் - புளியங்குளம், நெடுங்கேணி
(வன்னி மாபெரும் இடப்பெயர்வு முள்ளிவாய்க்கால் வரை)
2009 - 2013 : மன்னார் - ஞானோதயம் (ஆன்மீகக் கல்வி மையம்)
- ஆரம்ப நவசந்நியாச மடம் - குருத்துவ உருவாக்குப்பணி
- நிதிப்பொறுப்பாளர்,
- வைத்தியசாலை ஆன்மீகப்பணி - மாவட்ட வைத்தியசாலை -
- மன்னார்
2013 : இயக்குனர் - அமல அன்னை அன்பகம் - முழங்காவில்
- ஆதரவற்ற சிறுவர்களின் பராமரிப்பு
- முன் பள்ளி பாடசாலையின் முகாமைத்துவம்
2013 : ஐரோப்பிய நாடுகளின் அமதிகள் (omi) இல்ல தரிசிப்புப் பயணம்
2013 - 2014 : முதல்வர் - யாழ் அமதிகள் இல்லம் - கொழும்பு
- தமிழ் மக்களின் ஆன்மீகப்பணி
- வைத்தியசாலை ஆன்மீகப்பணி - தேசிய வைத்தியசாலை கொழும்பு
2014 - 2015 : பங்குத்தந்தை - புனித வனத்து சின்னப்பர் ஆலயம் - ஹப்புத்தளை
2015 - 2019 : முதல்வர் - அமல உதயம் - திருகோணமலை
- ஆசிரியப்பணி - திருகோணலை - புனித சூசையப்பர் கல்லூரி
- ஆன்மீகப்பணி - மாவட்ட வைத்தியசாலை திருகோணமலை
- சிறைச்சாலை ஆன்மீக உளநலப் பணி - சிறைச்சாலை - திருகோணமலை
2019 : இந்தியா - மூன்று மாத உளநல ஆற்றுகைப் பயிற்சி - பெங்களுர்
- 01..08.2019 - இன்றுவரை - வைத்தியசாலை ஆன்மீகப்பணி போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு
- சிறைச்சாலை ஆன்மீக உளநலப்பணி - சிறைச்சாலை - மட்டக்களப்பு
2017 தொடக்கம் - இன்றுவரை :
- அமலமரித்தியாகிகளின் கிழக்கு, தெற்கு மாவட்ட முதல்வர்

அருட்பணியாளரின் பணி மென்மேலும் சிறப்பாகத் தொடர திருகோணமலை மறைமாவட்டமாக இணைந்து இறையாசீர் வேண்டுவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்

- திருமலைத்தீபம் -

**செபிப்போம்! வாழ்த்துவோம்!**

நெடுந்தீவு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் 19.09.2019 காலை 10.00மணிக்கு குருத்துவ வாழ்வின் வெள்ளிவிழா திருப்பலியை ஒப்புக் கொடுக்கிறார்.

**ஆண்டவரோடுள்ள உறவில் நிலைத்திருங்கள் (பிலி 04 : 01)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org